Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்:-பத்து

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 20 | செவ்வாய்க்கிழமை (05.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 229

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## தேக்க நிலை அடைந்துள்ள

# சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க யப்பான் அரசு உதவும்

## பிரதமரிடம் யப்பான்பிரதி அமைச்சர் உறுதி

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தேக்க நிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு யப்பானிய அரசு தன்னாலான முழு உதவிகளையும் செய்வதற்குத் தயாராக இருப்பதாக யப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

தேக்க நிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகளை எடுக்கும் நோக்குடன் கொழும்பு வந்திருந்த யப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு நேற்று நண்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று இடம் பெற்ற இச் சந்திப்பின் போது பிரதமருடன் இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் லால் தர்மசிறி கமகே, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் யப்பானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானுவுடன்,இலங்கைக்கான யப்பான் தூதுவர் ஒட்சுவாவும் கலந்து கொண்டனர்.

பிரதமருடனான நேற்றைய சந்திப்பில் ரெற்சுரோ ஜானு நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றின் அவசியம் பற்றி பிரதமர் ரணிலிடம் வற்புறுத்திக் கூறியுள்ளதுடன் நேற்று முன்தினம் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது இடம் பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பான குடாநாட்டு மக்களின் கருத்துக்களையும் பிரதமருக்கு விளக்கிக் கூறியுள்ளார். இந் நிலையில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அரசு-புலிகள் சமாதான முயற்சிகளுக்கு யப்பான் பூரண ஆதரவை வழங்குமென அவர் தெரிவித்தார்.(ம)

## கண்காணிப்புக் குழுவினர் மணலாறு செல்வர்

(கொழும்பு)

மணலாற்றுப் பகுதியில் விடுதலைப புலிகளின் பதுங்கு குழிகளை நேரில் பார்வையிடுவதற்காக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நாளை அங்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மணலாற்றுப் பகுதியில் படையினரின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் பதுங்கு குழிகளை அமைத்திருப்பதாகவும் அதனை அகற்ற உதவ வேண்டும்

(10ம் பக்கம் பார்க்க)



## அமைச்சர் ரெற்சுரோ-டிரோன் நேற்று சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஜப்பானின் பிரதி வெளி விவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு, வெளிவிவகார் அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று இடம் பெற்ற இச் சந்திப்பில் தடைப்பட்டுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகள குறித்து கருத்துக்களைப் பரிமாறிய ஜப்பானிய அமைச்சர் சமாதான முயற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்திக் கூறினார்.

இதேவேளை மாத்தறை மாவட்டத்துக்கான நீர் விநியோகத் திட்டஒப்பந்தமும் பிரதி

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்பு நாட்டைப் பிரிக்கும் அதிகார ஆவணம்!

## தேசிய சங்கப் பேரவை குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான யோசனை நாட்டைத் துண்டாடுவதற்கான அதிகார பூர்வ ஆவணம் என தேசிய சங்கப் பேரவை குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தேசிய சங்கப் பேரவைத் தலைவர் சங்கைக்குரிய எல்லாவல மேதானந்த தேரர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டை உத்தியோக பூர்வமாகத்துண்டாடுவதற்கு அடிகோலும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராக முகம் கொடுக்கும் வகையில் தேசிய ரீதியில் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எமது நாடு இப்பொழுதே இரண்டாகத் தான் பிரிந்திருக்கிறது.ஆனால இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு மூலம் சட்டபூர்வமாக நாட்டில் இரண்டு அரசுகள் உண்டென்பதை அரசாங்கம் அங்கீகரிக்கவிருக்கிறது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும். ஜனாதிபதிக்கும் அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் பலத்த சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

அத்துடன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற போர்வையில்

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால திட்ட வரைபை எதிர்த்து ஜே.வி.பி. போராட்டத்தில் ஈடுபடும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடளாவிய ரீதியில் பத்துத் தினங்கள் எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபடப் போவதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

எதிர்வரும் 9-ந் திகதி ஆரம்பமாகும் இப் பிரசாரப் போராட்டம் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறுமென்றும் நாடளாவிய ரீதியில் பொதுக் கூட்டங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபுக்கு தேசிய பிக்குமார் சங்கமும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன்,போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறது. (இ)

## சு.ப.தமிழ்ச்செல்வன் வன்னி திரும்பினார்!

### தலைவர் பிரபாவுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

கிழக்கு மாகாணத்திற்கு அரசியல் விஜயம் மேற் கொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று முற்பகல் வன்னி திரும்பினார்.

அரச வான்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியில் கிளிநொச்சியை வந்தடைந்த அவரை விடுதலைப் புலிகளின் தளபதிகளும் போராளிகளும் வரவேற்றனர்.

வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் உடனடியாகவே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிழக்கு மாகாண அரசியல் நிலைமை,அப்பகுதி மக்களின் உணர்வுகள் குறித்து தமிழ்ச்செல்வன் தலைவருக்கு விளக்கிக் கூறினார். (இ)

## நாட்டைப் பாதுகாக்க ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதே ஒரேவழி

## அனுரா பண்டாரநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைப் பேரழிவிலிருந்து பாதுகாப்பதற்கு ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதே ஒரே வழியென பொது ஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

தம்புள்ளவில் நடைபெற்ற கட்சியின் மாநாடு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; உயிரைத் தியாகம் செய்தேனும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதன் மூலமும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் துரோகச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதை 99% வீதமான கட்சி ஆதரவாளர்கள் ஆமோதிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால் நாட்டின் சுதந்திரம் பறிபோய் வடக்கில் தமிழீழ இராச்சியம் உருவாகிவிடும்.

எனவே உயிரைக் கொடுத்தாகிலும் அரசின் திட்டங்களை முறியடிக்க ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதே தற்போதைய தேவை என்றும் அவர் கூறியுள்ளார். (த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிராமிய நடனத்தில் ஓர் கண்ணோட்டம்

**''கலை என்பது உணர்ச்சிகளின் வெளிப்பாடு. அது உணர்ச்சியை வெளியிடுவதுடன், பிறருக்கும் அவ் உணர்ச்சியை ஊட்டவல்லது''** என டால்ஸ்டாய் கூறுகின்றார். கலை பற்றிய டால்ஸ்டாயின் இக் கருத்து கிராமிய கலைகளுக்குப் பெரிதும் பொருத்தும். கிராமியகலைகளில் இடம் பெறும் கிராமிய நடனம் அல்லது நாட்டுப்புறநடனம் என்பது பாமர மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இருந்து தானாகவே உருவாகி வளர்த்து வந்த ஒருவகை நடனமாகும் இது பல காலமாக விளங்கி வரும் பாரம்பரிய கலையாகும்.

சாஸ்திரிய கலாசார நடனங்களை (Classical Dances) அத்துறையில் ஆழ்ந்த அறிவுள்ள சிலரால் மட்டுமே ஆழமாக இரசிக்கமுடியும். மற்றவர்களால் மேலோட்டமாகவே இரசிக்கமுடியும். ஆனால் கிராமிய நடனங்கள் (Folk Dances) எனக் கூறப்படும் ஆடல் வடிவங்கள் சாதாரண பாமர மக்களாலும், குறித்த சமூக வர்க்கத்தினாலும் இரசிக்கக் கூடியவை ஆகும்.

இக் கிராமிய நடனங்கள் இயற்கைப் பாங்கினை காலநிலையினை, சமய, சமூக, பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை, அடிப்படையாகக் கொண்டு வளர்க்கப்பட்டு வந்த ஆட்ட முறைகள் எனக் கூறப்படுகின்றது. இந்த வகையில் ஆடப்படும் கிராமிய நடனங்கள் பல வகைப்படும். அவற்றுள் மயிலாட்டம், மானாட்டம், ஒயிலாட் டம், பொய்க்கால் குதிரையாட்டம் (புரவியாட்டம்), புலியாட்டம், பொம்மலாட்டம், உடக்குப்பொம்மையாட்டம், நிழலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், வாளாட்டம், தீப்பந்தாட்டம், சிலம்பாட்டம், குறவன் குறத்தியாட்டம் (குருவிக்காரன் ஆட்டம்), காளைமாட்டு ஆட்டம், செட்டியார் செட்டிச்சி ஆட்டம், தேவராட்டம், மாரடிப்பாட்டம், மகுடாட்டம் (கணியான் கூத்துர கோலாட்டம்), தாளக்காவடியாட்டம் என்பன குறிப்பிடத்தக்கன.

## மயிலாட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் குதிரையைப் போலவே மயிலாட்டத்திற்கும் மயில்கூட்டை உடம்பிலும், மயிலின் தலைக்கூட்டைத் தலையிலும் அணிந்து கொண்டு முகம் மற்றும் உடலின்

ஆடப்பட்டு வருகின்ற மயிலாட்டமானது ஒரிசாவின் கவாராக்களிடம் காணப்படும் ஒரு பழங்கதையில் இருந்தே தோன்றியதாகக் கூறப்படுகின்றது. அதாவது ''கடவுளின் மக்கள் இறக்கு முன் கடவுளிடம் தான் இறந்தபிறகு தனது சவ அடக்கத்தின் போது நாட்டிய நிகழ்சிக்கு




படுகின்றது.

### பரதநாட்டியத்தில் மயில் நடனம்

செந்நெறிக் கலையாக விளங்கும் பரத நாட்டியத்திலும் மயில் நடனம் இணைந்து ஆடப்பட்டு வருகின்றது. நாட்டுப் புறக்கலை

ரெனத் தன அலகால் பாம்பைத் தாக குதல் போன்ற பாவனைகளைச் செய்து ஆடுகின்றனர். வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம், தாளம் போன்ற பக்க இசைக்கேற்ப மயில் நடனம் காலசைவுகளும், உடல் அசைவுகளும் இயங்கச் சிறப்பான ஒரு காட்சியாக ஆடப்படுகின்றது.

நாட்டுப் புறக் கலையான மயில் ஆட்டத்தில் இருந்து செவ்வியல் கலைகளில் இந்நடனம் புகுத்தப் படும் பொழுது உடை,பயன்படும் கருவிப் பொருள், ஆட்ட அடவுகள், பக்க இசை என்னும் பல நிலைகளில் முற்றிலும் வேறுபட்ட பரிணாமத்தில் காணப்படுகின்றது.

தஞ்சாவூரில் சதிர் நாட்டிய மரபின் வழி வந்த ஏரம்பநாதன் என்னும் பரதநாட்டிய ஆசிரியரின் கூற்றுப்படி ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்பு தான் மயில் நடனம் பரத நாட்டியத்தில் புகுத்தப்பட்டது எனக் கருதப் படுகிறது. ஏரம்பநாதன், தான் அறிந்த அளவில் குமாரி சுவர்ண

முகி என்ற பரதநாட்டியக்கலைஞர் தான் முதன் முதலில் தன் பரத நாட்டிய நிகழ்ச்சியில் மயில் நடனத தைப் புகுத்தி ஆடியதாகக் குறிப் பிடுகிறார்.

ஒவ்வொரு வரும் நிற்க வேண்டும். என்ற அறிவுறுத்தலும் பிரார்த்தனைப் பாடலில் இருக்கும். குறிப்பாக,

**''முந்தி முந்தி விநாயகரே அருளி**
**முப்பத்து முக்கோடி தேவர்களே**
**.............................................**
**.............................**
**ஆளோடு ஆளு உரசாமலே உங்கள்**
**ஆளிலே ஒரு முழம் தள்ளி நின்று**
**காலோடே காலு உரசாமல் உங்கள்**
**கைபிடி துணி தவறாமல்**
**மேலோடே மேலு உரசாமல் உங்கள்**
**வேருவைத் தண்ணீர் சிதறாமல்....''**

என்றும்,

**ஜெய ஜெய கணபதியே ஓம் ஜெய**
**ஜெய கணபதியே**
**ஆகுவாகனம் மீதிலேறியே அருவம்**
**தருகுகனே**
**.............................................**
**.............................................**
**ஒய்யாரமான இன்மட்டங்கள் நாம்**
**ஒய்யினில் சொல்றோம் நேரே நில்லு**
**நேரே நில்லு நெளியாமல் நில்லு**
**நீங்கள் ஆளுக்கொரு முழம் தள்ளி**
**நில்லு**
**காலோடு காலும் உரசாமலே**
**உங்கள்**
**கைபிடி லேஞ்சி தவறாமலே**
**மேலோடு மேலும் உரசாமலே**
**உங்கள்**
**வேருவைத் தண்ணீர் சிதறாமலே**

என்றும் பாடல்கள் இருப்பதைக் காணலாம்.

இந்நடனத்தை ஆடும்போது குழுவினர் ஒரே நேர் கோட்டில் அழகாக நின்று ஆடுவர். இவ் ஆட்டத்திற்கு டோலக், ஜாலரா என்பன இசைக்கப்படும்.

# மயிலாட்டம் - ஒயிலாட்டம்

ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கூற, கடவுளும் அவள் இறந்ததும் தானே ஒருநடனக்காரராக மாறி மயிலைப் போல் வேடந்தாங்கி மயில் நடனம் ஆடி, அவளின் விருப்பத்தை நிறைவேற்றினார்'' என்றும் அப்பழங்கதை கூறுகின்றது.

இவ்வாட்டமானது தமிழ்நாட்டில் தலை சிறந்த நாட்டுப்புற நடனமாக ஆடப்பட்டு வருகின்றது. தமிழக நாட்டுப்புறக் கலைஞர்களின் கருத்துப்படி திருச்சியைச் சேர்ந்த சுந்தர ராவ் என்பவரே மயில் நடனத்தை

யாக புகழடைந்த மயிலாட்டம் மிக அண்மைக் காலத்திலிருந்தே பரத நாட்டியத்தில் புகுத்தப்பட்டு ஆடி வரப்படுகிறது. பரதநாட்டியத்தில் பரதமாடுபவர் இம் மயில் நடனத்தை பக்க இசைக்கு ஏற்ப நளினமான




## ஒயிலாட்டம்

இது ஒயில் கும்மி என்றும் அழைக கப்படும். ஆண்களால் ஆடப்படு கின்ற கிராமிய நடனங்களில் ஒயிலாட்டமும் ஒன்றாகும். இது கிராமத் துக்கோயில் திருவிழாக்காலங்

''வாத்தியார்'' என்ற ஒருவர் இந்த ஒயில் குழுவினருக்குப் பயிற்சி அளிப்பார். ஆட்டத்தில் இவரும் முக்கிய பங்கு வகிப்பார். ஆடுவதையும் பாடுவதையும் அவரே தொடககி வைப்பார். மற்றவர்கள் அதைப்பின் பற்றி ஒருமையான, முறையில் ஆடுவார்கள்.

இவ்வாட்டம் இந்தியாவில் திருச்சி, மதுரை, கோவை போன்ற மாவட்டங்களில் இன்றும் பெரிதும் வழக்கில் உள்ளது. இந்தநடனத்தைப் பார்ப்பதில் மக்கள் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். இந்நடனம் பல இரவுகள் தொடர்ந்தும் திறந்த

குறத்தியாட்டம் (குருவிக்காரன் ஆட்டம்), காளைமாட்டு ஆட்டம், செட்டியார் செட்டிச்சி ஆட்டம், தேவ ராட்டம், மாரடிப்பாட்டம், மகுடாட்டம் (கணியான் கூத்துர கோலாட்டம்), தாளக்காவடியாட்டம் என்பன குறிப் பிடத்தக்கன.

## மயிலாட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டத் தில் குதிரையைப் போலவே மயி லாட்டத்திற்கும் மயில்கூட்டை உடம்பிலும், மயிலின் தலைக்கூட் டைத் தலையிலும் அணிந்து கொண்டு முகம் மற்றும் உடலின் ஏனைய பகுதிகளைத் துணியால் மறைத்துக்கொண்டு மயில்போல் ஆடும் நடனம் மயிலாட்டம் எனப் படுகிறது. இந் நடனத்தை ஆடும் நாட்டுபுறக் கலைஞர்கள் அளவுப் பிரமாணத்துக்கு ஏற்ப களிமண் அச்சிலிருந்து செய்து எடுக்கப்பட்ட மயில்கூட்டின் மேல் பல வர்ணங் கள் தீட்டியும், கண்ணாடிகள் பதித் தும் மயிலின் உடற்கூடு மற்றும் தலைக்கூட்டைத் தயாரித்துக் கொள்கின்றனர். மயிலிறக்கைகள், தோகைக் கருவி, அலகு போன்றவற் றையும் இவ்வாறே செய்து அணிந்து கொள்கின்றனர். ஆட்டக்காரரின் முகத்தை மறைத்துக் கொள்ளத் தலைக கூட்டின் விளிம்பில் துணிகட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். ஆட்டக்காரரின் உடலை மறைக்க மயில் உடல்கூட் டின் அடிப்பாக விளிம்பில் பச்சைத் துணிப் பாவாடை பயன்படுகிறது. ஆட் டக்காரர்கள் காலில் சலங்கைகட்டிக் கொண்டு இந் நடனத்தை ஆடுவார்கள்.

மயிலாட்டத்திற்கு நையாண்டி மேளமே பக்கஇசையாக அமைந்துள் ளது. இப் பக்க இசைக்கேற்ப மயி லாட்டக்கலைஞர் மயிலின் நடை, ஓட்டம், அசைவுகள், தலையசைப்பு, தோகைவிரித்துக் சுருக்குதல் போன்ற செயல்களைத் தாளத்திற்கேற்ப நிகழ்த்தி சிறந்த காட்சிகளைப் படைப பார். மயிலாட்டத்திற்கு எனத் தனியான மரபுரீதியான ஆட்ட முறைகளும் அசை வுகளும். அவற்றுக்குரிய ஜதிகள். பாடல்கள் என்பனவும் ஒழுங்கமைக் கப்பட்டிருக்கின்றன.

## மயிலாட்ட வரலாறு

இந்தியாவின் பல மாநிலங்களி லும் ''மயூர்திருத்தம்'' என்ற பெயருடன் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கூற, கடவுளும் அவள் இறந்ததும் தானே ஒருநடனக்காரராக மாறி மயிலைப் போல் வேடந்தாங்கி மயில் நடனம் ஆடி, அவளின் விருப்பத்தை நிறைவேற்றினார்'' என்றும் அப்பழங்கதை கூறுகின் றது.

இவ்வாட்டமானது தமிழ்நாட்டில் தலை சிறந்த நாட்டுப்புற நடனமாக ஆடப்பட்டு வருகின்றது. தமிழக நாட்டுப்புறக் கலைஞர்களின் கருத் துப்படி திருச்சியைச் சேர்ந்த சுந்தர ராவ் என்பவரே மயில் நடனத்தை முதலில் கண்டுபிடித்து திருச்சியில் இருந்து தஞ்சைக்குப் போய ஆடினார் எனக் கூறப்படுகின்றது. இவரின் ஆட்டத்தைக் கண்ட தஞ்சை கோலாட்டக் கலைஞரான 'சிங்காரம்' என்பவர் மயிலின் தோகை சுருங்கி விரிய வசதியில்லாத நிலையை மாற்றி மயில் தோகை இயந்திரம் அமைத்து, ஆடுபவர் குனிந்தால் தோகை விரியவும், ஆடுபவர் நிமிர்ந் தால் தோகை சுருங்கிக்கொள் வதற்கும் மாற்றங்களைச் செய்து இவ் ஆட்டம் புகழடைவதற்கு வழி சமைத்தார்.

திருச்சி சுந்தரராவிடம் இருந்து தஞ்சையைச் சேர்ந்த டீ.என்.சின்னையா என்பவர் இவ் ஆட்டத்தைக் கற்றுக் கொண்டு ஆடினார். இவருக்குப் பின் இவ் ஆட்டம் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியது. இன்று இவ் ஆட்டம் தஞ்சையைப் பொறுத்த வரையில் பொய்க்கால் குதிரையாட்ட த்தைப் போலவே மராட்டிய குடும் பங்களின் கலையாக விளங்கி வருகின்றது. பொய்க்கால் குதிரை யாடி வரும் டி.சுந்தரமூர்த்தி என்பவா துணை நடனமாக முருகன் மயில் மீது வந்து இறங்குவது போல் காட் சியைப் படைத்து மயிலாட்டத்தை ஆடினார் எனக் கூறப்படுகின்றது. தஞ்சையைச் சேர்ந்த டி.எம்.பென்னி சென்னைப் பகுதியில் மயிலாட்டம் வளரக் காரணமாக இருந்தார்.

தஞ்சை வடக்கு வாசலில் இருக கும் மராட்டியரான சுந்தரராவ் என் பவரே இன்று சிறந்த மயிலாட்டக் கலைஞராக விளங்கி வருகின்றார்.

இந்தியாவில் இருந்து இலங் கைக்கு வந்த சின்னமேளம் ஆடும் பெண்கள் வடபகுதியில் உள்ள கோயில் திருவிழாக்களின் போது இவ் ஆட் டத்தை ஆடினார்கள் எனக் கூறப் யாக புகழடைந்த மயிலாட்டம் மிக அண்மைக் காலத்திலிருந்தே பரத நாட்டியத்தில் புகுத்தப்பட்டு ஆடி வரப்படுகிறது. பரதநாட்டியத்தில் பரதமாடுபவர் இம் மயில் நடனத்தை பக்க இசைக்கு ஏற்ப நளினமான




உடலசைவுகள் வாயிலாக ஆடிக் காட்டுவது சிறப்பான காட்சியாக அமைகின்றது. பரதநாட்டியத்தில் நாட்டுப்புற மயிலாட்டத்திற்கு பயன் படுத்தப்படும் மயில் கூட்டைப் பயன படுத்துவது இல்லை. பச்சையும், நீலமும் கலந்த துணியில் முழுக்கால் கள் மற்றும் முழுக்கைகளையும் மறைக்கும் படியான உடைகளைத் தைத்து அதனை அணிந்து கொண் ஆடுகின்றனர். இடுப்பில் மயில் தோகை கட்டிக்கொண்டு தலையில் சிறிய மயில் தோகைக்கொத்தை மயிலின் கொண்டையைப் போல் அணிந்து கொண்டு காலில் சலங் கையைக் கட்டி இந் நடனத்தை ஆடு கின்றனர். மயில் தோகைகளினூடே செலுத்தப்பட்ட கயிற்றின் இரு நுனி வளையங்களைத் தன் இருகைகளி லும் சுண்டுவிரல்களில சேர்த்துக கொண்டு அவ்வப் போது இக் கயிறு களை இழுத்து மயிலின் இறக் கைகளை விரித்து ஆடுகின்றனர்.

மயில் மகிழ்ச்சியால் தோகையை விரித்தாடுதல், தயங்கித் தயங்கி ஆடுதல், எகிறிக் குதித்தாடுதல், பாம் பைத் தாக்கப் பம்முதல், திடீ

## ஒயிலாட்டம்

இது ஒயில் கும்மி என்றும் அழைக கப்படும். ஆண்களால் ஆடப்படு கின்ற கிராமிய நடனங்களில் ஒயி லாட்டமும் ஒன்றாகும். இது கிராமத் துக்கோயில் திருவிழாக்காலங் களில் நிகழ்த்தப்பட்டது. சில சமயங்களில் கேளிக்கைக்காகவும் இது நிகழ்த்தப்பட்டது. இந்தக்குழு 12 முதல் 20 ஆண்களைக்கொண்ட தாக இருக்கும். இவ்வாட்டக்காரர் கள் கைகளில் கைக்குட்டைகளை வைத்து நடனமாடுவார்கள். இதனால் இவ் ஆட்டத்தை ''லேஞ்சி ஆட்டம்'' எனவும் கூறுவர்.

இவ்வாட்டத்தை ஆடுபவர்கள் யாவரும் பளிச்சென்ற வர்ணங்க ளில் சட்டைகள், வேட்டி, காற்சட்டை கள், கழுத்துப்பட்டைகள் அணிந் திருப்பார்கள். ஆபரணங்களும் கூட அணிவதுண்டு. பாடிக்கொண்டே நடனமாடும் பொழுது தமது கையி லுள்ள கைக்குட்டைகளை அசைப் பார்கள். அவர்களின் கால்களில் சலங்கை கட்டப்பட்டிருக்கும்.

இவ் ஆட்டத்தை ஆடுபவர்கள் புராண, இதிகாச கதைப் பாடல் களுக்கு ஏற்ப ஆடுவது மரபு. முதலில பாடப்படும் பாடல் பிரார்த்தனையோடு நின்று விடாது அதில் கலந்து கொள் பவர்கள் ஒருவரின் கால்களுடன் ஏனையோரின் கால்கள் மோது வதைத் தவிர்க்க இடைவெளி விட்டு

''வாத்தியார்'' என்ற ஒருவர் இந்த ஒயில் குழுவினருக்குப் பயிற்சி அளிப்பார். ஆட்டத்தில் இவரும் முக்கிய பங்கு வகிப்பார். ஆடுவதை யும் பாடுவதையும் அவரே தொடககி வைப்பார். மற்றவர்கள் அதைப்பின் பற்றி ஒருமையான முறையில் ஆடுவார்கள்.

இவ்வாட்டம் இந்தியாவில் திருச்சி, மதுரை, கோவை போன்ற மாவட் டங்களில் இன்றும் பெரிதும் வழக்கில் உள்ளது. இந்தநடனத்தைப் பார்ப்பதில் மக்கள் மிகுந்த அக் கறை காட்டுகிறார்கள். இந்நடனம் பல இரவுகள் தொடர்ந்தும் திறந்த வெளியிலும் ஆடப்படுகிறது. பாட் டின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அங்கங்களின் இயக்கமும் விரைவு பெற்று ஆண்மையும் அழகும் பூரிப் பும் தோன்ற நடனம் நிகழ்த்தப்படும் அதன் பெயரை ( ஒயில் ஆட்டம் ) மெய்ப்பிப்பது போல முழு நடனமும் உயிரும், ஒயிலும் உள்ள தாக விளங்கும் கோவை மாவட்டத்தில் இதற்கான கதைகள் பெரும்பாலும் முருகப்பெருமானையும் வள்ளி யையும் பற்றியே இருக்கும். காத்த வராயன், மதுரை வீரன் போன்ற கதை களையும் பயன்படுத்துவதுண்டு.

இந்நடனமானது இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதியில் இன்றும் ஆடப்பட்டு வருகிறது இந்தியா விலிருந்து சீமெந்து தொழிற்சாலை கட்டிய போது தொழிலாளியாக வந்த கேசவன் என்பவர் மயிலிட்டி தெற்கு கட்டுவன் பகுதியில் இவ் ஆட்டத்தை

**திருமதி வலன்ரீனா இளங்கோவன்**
ஆசிரியை,
யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி

ஆட்டக்காரரான குருசாமி உள் ளிட்ட 12பேருக்கு பழக்கினார். அத்துடன் 'வசந்தன் அடி' எனப்படும் வசந் தன் கூத்தையும் பழக்கினார். குருசாமி குழுவினரே பாரம்பரியமான இவ்ஆட் டத்தை கட்டுவன் ஞானவயிரவர் கோயில், முத்துமாரி அம்மன் கோயில, குரும்பசிட்டி முத்துமாரி அம்மன், புளி யடி வயிர வர்கோயில் போன்ற ஆலயத் திருவிழாவின் போது ஆடி வந்தார்கள். என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போதும் விழாக்களில் ஆடப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்து நாட்டுக்கூத்து கலை ஞரான மெற்றாஸ் மெயில் மற்றும் யாழ். திருமறைக்கலாமன்றத்தினர் இவர்களிடம் இவ் ஆட்டத்தைப் பழகி இவர்களைக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# "நமக்காக நாம்" - எழுச்சிப் பிரசாரப் பாதயாத்திரை

(கொழும்பு)

''நமக்காக நாம்'' என்னும் தொனிப் பொருளில் எதிர் வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு மாநகர எல்லைக்குள் எழுச்சிப்பிரசாரப் பாதயாத்திரை ஒன்றைத் திரைப்பட இயக்குநர் க. தேவதாசன் மேற்கொள்ளவுள்ளார்.

விதேசியப் பொருளாதாரத்திற்கு விலை போவதை விடுத்து, சுதேசியப் பொருளாதாரச் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவோம்! ''என்ன வளம் இல்லை எங்கள் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி நாட்டில் ?'' உழைக்கும் மக்களின் உரிமை உட்பட அனைத்து மனித உரிமைகளையும் வென்றெடுப்போம்!


இறக்குமதிக் கலை, கலாசாரத்திலிருந்து இலங்கை இனங்களின் தனித்துவமான கலை, கலாசாரத்தை மீட்டெடுப்போம்! ஆங்கில மோகத்துக்கு ஆளாகாமல் சிங்கள,தமிழ்மொழிகளைப் பேணி வளர்த்திடுவோம்! அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டையும், அரச பயங்கரவாதத்திலிருந்து நாட்டினங்களையும் காப்போம்!

வடக்கு-கிழக்கில் மக்களின் இயல்பு வாழ்க்கையை உத்தரவாதப்படுத்தி, இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வுக்காக உரத்துக் குரல் கொடுப்போம்! இவையெல்லாவற்றிலும் மேலாக நாட்டுப்பற்றும் சுயமரியாதையும் கொண்ட மதச்சார்பற்ற ''மக்கள் அரசு'' ஒன்றை மத்தியில் நிறுவிடுவோம்!

இந்த இலக்கை வென்றெடுக்க இடதுசாரி மற்றும் ஜனநாயகக் கட்சிகளும் பொதுஅமைப்புகள் மற்றும் சமூகப்பெரியார்களும் இணைந்த ''மாபெரும் மக்கள் பேரியக்கம்'' ஒன்றைக் கட்டியெழுப்புவோம்!

நம்மை ஆளத்துடிக்கும் அந்நிய சக்திகளிடம் நமது வாழ்வை அடகு வைத்துவிடாமல் நமக்காக நாம் போராடுவதைத் தவிர சரியான மார்க்கம் வேறெதுவும் இல்லை என்பதை உணர்ந்து எழுச்சி கொள்வோம்! ஆகிய விடயங்களை வலியுறுத்தி இந்த எழுச்சிப் பிரசார பாதயாத்திரை இடம் பெறவுள்ளது. (உ)

## இரட்டையரைப் பிரிக்க அதாவுல்லா தீவிர முயற்சி!




## இளம் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

மூதூர் ஆலயடி வீதியில் உள்ள தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 2.00மணியள[illegible] இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குணழ் சுபாஸ்ராஜ் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தரே சூட்டுக்குப் பலியானவராவார்.

இந்நபர் மேசன் தொழிலில் ஈடுபட்டு வருபவர் எனத்தெரிவிக்கப்படுகிறது. (தி)

## ரயில்வே கட்டணம் அதிகரிக்கப்படா

(கொழும்பு)

பயணிகள் சேவை தரம் உயர்த்தப்படும் வரை கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது என இலங்கை ரயில்வே அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நட்டத்தை ஈடு செய்வதை மட்டும நோக்காகக் கொண்டு, கட்டணங்களை அதிகரிப்பது நியாயமற்றது.

ரயில்போக்குவரத்துச் சபையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அதிகாரசபை முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. (தி)

## ஜேர்மனில் அகதி அந்தஸ்து கோரியுள்ள

# 10 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை கிடைக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் நாட்டில் அகதி அந்தஸ்த்துக் கோரி குடியேறியவர்களுக்கு நிரந்தர குடியுரிமை வழங்குவதற்கான சட்ட மூலத்திற்கு ஜேர்மன் கால்சுவ நீதி மன்றம் அங்கீகாரம் அளித்துள்ளது.

நிரந்தரக் குடியுரிமைக்கு அனுமதி கிடைத்துள்ள இந்த நிலையில் ஜேர்மனியில் குடியேறியுள்ள 10 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்கும் நிரந்தரக் குடியுரிமை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக அரசியல் திறனாய்வாளரும் சட்ட வல்லுநருமான இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஆராய்வதற்கு இங்கு வந்துள்ள இராமச்சந்திரன் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

அகதி அந்தஸ்த்துக் கோரிதினமும் பல்லாயிரக் கணக்கானவர்கள் ஜேர்மனியில் சட்டவிரோதமாகக் குடியேறி வருகின்றனர். அவ்வாறு சட்ட விரோதமாகக் குடியேறுபவர்களில் பெரும்பாலானவர்களாக இலங்கையரே காணப் படுகின்றனர்.

இவ்வாறானவர்கள் தற்காலிக விஸாவுடன் பத்து வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றனர்.இவர்களில் குடும்பமாகக் குடியேறியவர்களின் பிள்ளைகள் பலர் தற்காலிக விஸாவுடன் அங்கு கல்வி கற்றும் வருகின்றனர்.

இவ்வாறு குடியேறியவர்களில் முன்னுரிமை அடிப்படையில் நிரந்தரக் குடியுரிமை வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றை ஜேர்மன் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இசசட்ட மூலத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென அந்நாட்டின் எதிர்க் கட்சி கோரிக்கையை முன் வைத்தது.

நீண்டகாலமாக நிரந்தர குடியுரிமையின்றி இருப்பவர்கள், தொழில் புரிபவர்கள், நோய் வாய்ப்பட்டிருப்பவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக நிரந்தர குடியுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும்,அவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளை வழங்கவோ அன்றி செய்து கொண்டிருக்கும் தொழிலை நிரந்தரமாக்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சி சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொண்டதையடுத்து ஜேர்மன் கால்சுவ நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த மேற்படி நீதிமன்றம் மேலுள்ள திருத்தங்களை அங்கீகரித்து நிரந்தர குடியுரிமையை தற்போது வழங்கியுள்ளது.

அதேவேளை,இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் அரசியல் படுகொலைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இராணுவம், ஆயுதக் குழுக்களால் தேடப்படுபவர்களும் ஜேர்மனியில் தஞ்சம் புகும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் உடனடியாக நிரந்தரக் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதன் காரணமாக, புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் அவ்வாறான பாதிப்புக்களால் சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஜேர்மனியில் நிரந்தர குடியுரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இராமச்சந்திரன் தெரிவிததுள்ளார்.

(உ-18)

# இடைக்கால நிர்வாக சபையை தேசிய ஐக்கிய முன்னணி எதிர்க்காது

## கட்சித் தலைவி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்திற்கு தாம் ஒரு போதும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.இவ்இடைக்கால நிர்வாக சபை நாட்டின் சகல பிரிவினரதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.



இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி பேரியல் அஷ்ரப் வானொலி நிலையமொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும கருத்து வெளியிட்ட அவர்,

சிறுபான்மை இனத்துக்கு பெரும்பான்மை இனம் அநீதி இழைத்துள்ளது என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினை ஆரம்பித்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இவ் இடைக்காலநிர்வாக சபையில் சிறுபான்மை இனத்தினருக்குத் தொடர்ந்தும் அநீதி இழைக்கப்பட்டால், இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்பட்டுவிட்டதாக கருத முடியாது.

ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்வதற்கு ஒருபோதும் இணங்கமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இலங்கைப் பெண்களில் பலர் மூட்டுவலிக்கு இலக்காகும் ஆபத்து

(கொழும்பு)

இலங்கை மக்களில் அதிகமானோருக்கு மூட்டு வலி ஏற்படக்கூடிய அபாயமிருப்பதாக வைத்திய நிபுணர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து டாக்டர் ஆனந்த சேகர கருத்து வெளியிடுகையில்,

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் இந்த வருடம் இது வரை 39நோயாளிகளுக்கு முழங்காலில் சத்திரசிகிச்சை செய்யப் பட்டுள்ளது. இவர்களில் 32 பேர் பெண்கள் ஆவர்.

பொதுவாக மூட்டுவலி ஏற்பட்டுள்ள நோயாளிகள் முக்கியமாக பெண்கள் தங்களது எடையைக் குறைக்க வேண்டும்.

அத்துடன், காய்கறி உணவுகளை உட்கொள்வதே இதனைத் தடுக்கச் சிறந்த வழி.

ஒழுங்கான அடிப்படையில் தேகப் பயிற்சியினை மேற்கொள்வதும் இதற்கு நல்லதெனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (உ-8)

# உறவுப்பாலம்அமைத்தவர்களை பகைவர் போல் நடத்தினர் பொலிஸார்

(கொழும்பு)

உறவுப்பாலம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,யாழ் குடாநாட்டிலிருந்து தென்னிலங்கை சென்றவர்கள் அங்குள்ள பிரசித்தி பெற்ற இடங்களைப்படம பிடிப்பதற்கு பொலிஸாரின் முன்அனுமதி பெறப்பட வேண்டு மெப பொலிஸார் அவர்களிடமிருந்த படச்சுருள்களைப் பறித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித்தொியவருவதாவது,

குடாநாட்டிலுள்ள பிரதேச சபை, நகர. சபை ஆகியவற்றைச் சேர்ந்த 8 செயலாளர்கள் ஹிங்குராங்கொட பிரதேச சபையில் இடம்பெறவிருந்த அபிவிருத்தி பற்றிய 3 நாள் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றனர்.

அங்கு பயிற்சிப்பட்டறை முடிவடைந்ததும் நகரைச் சுற்றிப்பார்ப்பதற்காகப் புறப்பட்ட இவர்கள் பிரசித்தி பெற்ற இடங்களையும் கட்டடங்களையும் படம் எடுத்துள்ளனர்.

இவற்றை அவதானித்த பொலிஸார் தமது அனுமதியின்றி அவற்றைப் படமெடுக்க முடியாதெனக் கூறி அவர்கள் வசமிருந்த புகைப்பட சுருள்கள் மூன்றை கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறானவற்றை படமெடுக்க வேண்டுமானால் பொலிஸாரின் முன் அனுமதி பெறப்படவேண்டும எனக கூறிய அவர்கள் கைப்பற்றிய அம் மூன்று படச்சுருள்களையும மீளக்கையளிக்க மறுத்து விட்டதாகத் தெரிய வருகிறது. (உ -18)

# காவம் கடந்த இறப்பு,பிறப்பை பதிவு செய்வதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காலம் கடந்த பிறப்பு, இறப்பு தொடர்பான பதிவுகளைச் செய்வதற்கு யாழ். மாவட்டப் பதிவாளரை செவ்வாய்க்கிழமைகளிலும் மேலதிக பதிவாளர் நாயகத்தை எந்த நாளும் நேரடியாகவும் சந்தித்து உரிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக தனிப்பட்ட அமைப்புகளையோ, பொது அமைப்புகளையோ அல்லது தனியார் எவரையோ தேடிச்சென்று ஏமாறவேண்டாம் எனவும்,

பதிவுக்காக வரும்போது உலர் உணவு அட்டை, நிவாரண அட்டை, இராணுவப் பதிவுப் பிரதி,ஏனைய பிள்ளைகளின் விபரம், அவர்களின் பிறப்புச்சான்றிதழ்,கிராமசேவையாளரின் கடிதம்,பெற்றோரின் விவாக,பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அடடை என்பவற்றுடன் பெற்றோர்களும் நேரில் வரவேண்டும் எனவும் மேலும அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## இன்னும் ஒரு தகவல்

# அறுவைச் சிகிச்சையில் ஒரு சாதனை

தர்மம் தலைகாக்கும் என்பார்கள். ஒருவர் செய்யும் தர்மம் அவரது தலைமுறையையே காப்பாற்றும் என அதற்கு விளக்கம் கூறுபவர்களும் உள்ளனர். இது ஒரு பக்கம் இருந்தாலும் தலை நமது உடலின் முக்கியமான ஒரு பாகம். தலையை பாதுகாத்தால் முழு உடலையுமே பாதுகாப்பது மாதிரி யாராவது விபத்து நடந்து மருத்துவமனைக்குச் சென்றால் தலையில் அடிபட்டிருக்கின்றதா என்று தான் முதலில் பார்ப்பார்கள். தலையில் அடிபட்டவர்களைக் கவனிப்பதற்கென்று மருத்துவமனைகளில் தனிப்பிரிவே உள்ளது.

அது இருக்கட்டும் இப்போது நான் கூற வந்த விடயம் என்னவென்றால் ஒருவருக்கு மண்டை ஓடு உடைந்து மூளை சிறிது சிதறிப்போய் விட்டது. இருப்பினும் அவரைப் பிழைக்க வைத்துள்ளார்கள் இது. ஓர் அதிசயமான விடயம். மருத்துவத்துறையில் பெரியதோர் சாதனை என்று கூட இதனைக் கூறலாம்.

தென் அமெரிக்காவில் பொல்வியா என்று ஓர் நாடு. அங்கு உள்ள ஒருவர் தனது நண்பனைப் பார்க்கச் சென்றிருந்தார். சென்றவர் கையை வைத்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டியது தானே. அந்த நண்பனின் தந்தை ஒரு துப்பாக்கி வைத்திருந்தாராம். கைத்துப்பாக்கி இவர் அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு ஏதோ விஷமம் செய்திருக்கின்றார். உடனே அந்தத்துப்பர்க்கியும் விஷமம் செய்து விட்டது. ஆமாம்! வெடித்து விட்டது. இவரின் இடது கண் மீது குண்டு பாய்ந்து தலையைத்துளைத்துப் பின்பக்கமாக வெளியே போய் விட்டது. உடனே இவரை மருத்துவமனைக்குத் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். சிகிச்சை நடந்து இவரும் பிழைத்துக்கொண்டார்.

இருப்பினும் அவரது வலது பக்க உறுப்புக்கள் பக்க வாதத்தால் பாதிக்கப்படும் என்றும் அவருக்குப் பேச்சு வராது என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டனர். இரண்டு மாதங்கள் சுய நினைவில்லாமல் இருந்து மெதுவாக நினைவு திரும்பியது. லேசாக நடமாடினார். திக்கித்திக்கிப் பேசினார். எழுதிப் பழகத் தொடங்கினார். மருத்துவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஏன் என்றால் அவரது தலையில் காயம் ஆறிவிட்டதே தவிர மூளையைப் பாதுகாக்க மண்டையோடு இல்லை. ஓட்டுக்குப்பதிலாக அந்த இடத்தில் மெல்லிய தழும்புத் திசுதான் இருந்ததாம். ஏதாவது கூரான பொருள் விழுந்தால் அது உள்ளே போய்விடும். உயிருக்கே ஆபத்து.

மருத்துவர்கள் யோசித்தனர். அந்த இடத்தில் ஒரு மண்டை ஓட்டைப் பெருத்தி விட்டால் நன்றாக இருக்குமென்று யோசித்தனர். ஆனால் ஓட்டுக்கு எங்கே போவது வீட்டுக்கு ஓடு மாற்றுவது என்றால் கடையில் வாங்கி மாற்றி விடலாம். ஆனால் மனிதனுக்கு ஓடு மாற்றுவது என்றால் எந்தக் கடையில் போய் ஓடு வாங்க முடியும்? அது முடியாத காரியம். அந்த இளைஞரை அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றனர். மின்னிசோட்டா மாநிலத்தில் செயின்ட் பால் நகரைச் சேர்ந்த யோசப் ஸ்கோவ், ஃபிராங்க் பில்னே ஆகிய இரு மருத்துவர்கள் இந்த அபூர்வ அறுவைச் சிகிச்சையைச் செய்தனர். மண்டையோடு இல்லாத இடத்தில் புதிதாக எலும்புகளை வைத்துப்பொருத்த முடிவு செய்தனர். அப்படி வைத்தால் அதனை மூடுவதற்கு தோல் வேண்டுமே! அதற்கு எங்கே போவது? மண்டையில் ஏற்கனவே இருந்த தோலை விஷேட கருவி மூலம் இழுத்து நீட்டினர். சிறிது சிறிதாக இதை இழுத்துப் பெரிது பண்ணுவதற்கு பல மாதங்கள் ஆகியதாம். மண்டைஓட்டில் வலது பக்கத்தின் ஒரு பகுதியை வெட்டி எடுத்து குறுக்கே அறுத்து இரண்டு சில்லாக்கினார்கள். ஒரு சில்லைப் பழைய இடத்தில் வைத்து மூடினார்கள். மற்றையதை அடி பட்ட இடத்தில் வைத்து மூடினார்கள். ஆயினும் அது போதவில்லை. இன்னும் தேவைப்பட்டது. வலது விலா எலும்பிலிருந்து கொஞ்சம் எடுத்து ஏற்கனவே இழுத்து நீட்டி வைத்திருந்த தோலை இடது பக்க காது வரை இழுத்து மூடி விட்டனர். அவ்வளவு தான். அவர் சில நாட்களில் நலமாக வீடு திரும்பிவிட்டார். இந்த அளவுக்கு அடிபட்ட ஒருவர் இந்தளவு முன்னேறி உயிருடன் இருப்பது பெரிய அதிசயம் தான் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆகக் கூடி தருமம் தலை காக்கும் என்பது போல் ''விஞ்ஞானமும் தலை காக்கும்''

''தருமம் தலை காக்கும் என்பதை நான் அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டேன் என்றார் ஒருவர் எப்படி?'' என்றார் மற்றொருவர். '' தான் செய்த தருமம் தான் எனது தலையைக் காப்பாற்றியுள்ளது'' என்றார் இவர். ''கொஞ்சம் விவரமாகக் கூறுங்கள்'' என்றார் அவர். நேற்றிரவு ஒரு முக மூடித்திருடன் என் வீட்டுக்கு வந்தான். ஒரு விறகுக் கட்டையை எடுத்துக்கொண்டு என் தலையில் அடிக்க வந்தான். நான் அதற்கு முன்னர் என்னிடம் இருந்த வற்றையெல்லாம் எடுத்து அவனிடம் தருமம் செய்து விட்டேன். அந்தக்தருமம் தான் என்னைக் காப்பாற்றியது என்றார் இவர்.

தெல்கச்சி கோ. சுவாமிநாதன்

# பாதுகாப்புப் படைகள் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்துகிறார்கள்

## ஜப்பான் அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக குடியமர்த்துவது தான் அமைதி முன்னெடுப்பின் மிக முக்கிய அம்சம். துரதிஷ்டவசமாக இலங்கை பாதுகாப்புப்படைகள் அமைதி முயற்சியில் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்து வருகிறார்கள்.

இவ்வாறு வலிகாமம் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்திருந்த ஜப்பானிய வெளியுறவு சிரேஷ்ட துணை அமைச்சரிடம் கையளித்துள்ள மகஜரில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம மகஜரில் மேலும் போரினால உருக்குலைந்து போயிருக்கும் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பவும் அமைதி முன்னெடுப்புக்களில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கவும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளைக் கொண்ட இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை ஏற்படுத்துவது அவசியம்.

இலங்கை பாதுகாப்புப்படைகள் உயர்பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறி கட்டடங்கள் பலவற்றிலும் நிலை கொண்டிருப்பதானது, அப்பகுதிகளில் இருந்து மக்களை இடம் பெயரச் செய்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாழ்க்கை வசதிகள் ஏதுமின்றி அகதி முகாம்களில் அவலப்பட நேர்ந்துள்ளது என்றுள்ளது. (பி)

# பங்குச் சந்தையை பாதித்துள்ள வட-கிழக்கு இடைக்கால நிர்வாகம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டுள்ள வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபைத்திட்ட வரைபிற்கு விடுதலைப்புலிகளின் முடிவு எவ்வாறு அமையும் என்பது தெரியாததால் தற்போது கொழும்பு பங்குச்சந்தையில் பலத்த வீழ்ச்சி ஏறபட்டுள்ளது.

கொழும்பு பங்குச்சந்தையின் தற்போதைய புள்ளி விபரப்படி, கொழும்புக்கான அனைத்து பங்குகளினதும் விலையில் 0.38 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் 3.97 புள்ளிகளையே கொழும்புப் பங்குச் சந்தையில் பங்குகள் பதிவு செய்துள்ளதாக அதன் நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு- விடுதலைப்புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் ஆரம்பக் கட்டத்தில் சுமுகமான நிலையில் இருந்த போது இவற்றின் புள்ளி இவ்வருட முற்பகுதியில் 30 வீதமாக அதிகரித்தது.

இரு தரப்புக்கும் இடையில் தொடர்ந்தும் சாதகமான முறையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்படுமானால் பங்குச் சந்தையின் வளர்ச்சி மிக அதிகரிக்குமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால்தற்போது இடையில் தடைபட்டிருக்கும் பேச்சு வார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலும், வட-கிழக்கிற்காக விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டுள்ள திட்டவரைபின் முடிவை விடுதலைப்புலிகள அறிவிக்கும் வரையும் பங்குச்சந்தையின் செயற்பாடுகள் மந்தகதியில் இருக்குமெனவும், விடுதலைப்புலிகளின் சாதகமான பதில் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இவற்றின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்குமெனவும் பங்குச் சந்தை குழுமங்களின் பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (உ-18)

## இராசி பலன்

**05.08. 2003**

**(ஆடி 20, செவ்வாய்)**

அட்டமி - பி.இ. 12.02 வரை
சுவாதி - பி.ப. 4.12 வரை
இராகுகாலம் - 3.04 - 04.34
சுபநேரம் - 10.34-12.04

3ஆம் ஆடிச்செவ்வாய்

**மேடம்**
அறிஞர்சந்திப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் வருகை, தொழில் சிறப்பு.

**இடபம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்களால் உதவி, சகோதரர் வழி நன்மை, போசன சுகம்.

**மிதுனம்**
சௌரவக்குறைவு, புத்திரரால் கவலை, எடுக்க காரியம் தாமதமாகும், தொழில் விருத்தி.

**கடகம்**
மாதா சுகம், உஷ்ண ரோகம், புத்தி சாதுரியம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, வருமானம் அதிகரிக்கும், காரிய சித்தி.

**கன்னி**
அதிக செலவு, மாதர் நட்பு, திடீர் பயணம், காரியதாமதம்.

**துலாம்**
தெய்வசிந்தை, தொழிலில் புதிய திருப்பம், நல்ல முயற்சி, ஜனவசியம்.

**விருச்சிகம்**
பிரயாண அலைச்சல், உடல நலக குறைவு, எடுத்தகருமங்கள் தாமதமாகும், சுபசெலவு.

**தனுசு**
கீர்த்தி, குடும்ப நலம், எடுத்த கருமங்கள் கைகூடும்,பொருள் சேர்க்கை.

**மகரம்**
பிறருக்கு உதவுதல், தெய்வ சிந்தை, காரியம்கைகூடும், அதிகாரம்.

**கும்பம்**
மனச்சஞ்சலம்,முயற்சி தாமதம்,திடீர் நன்மை,நண்பர்கள் உதவி.

**மீனம்**
காரிய தடங்கல்,ரோக பயம், வாகன பயம், நண்பர்கள் விரோதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# இத்தாலி செல்ல முயன்ற 23 பேர் ஞாயிறன்று கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்ல முயன்ற 23 இலங்கையரை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் இரு படகுகள் புத்தளம் வென்னப்புவ கடலில் நங்கூரமிட்டிருப்பதையடுத்து கடற்படையினர் அந்தப் படகுகளை சோதனையிட முற்பட்டனர்.

இதன் போது மேற்படி படகுகளிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், கடற்படையினர் திருப்பித் தாக்கியதில் படகுகளிலிருந்த ஒருவர் சூட்டுக் காயத்திற்கு இலக்காகியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஏனைய 22பேரும் கொழும்பு துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தற்போது சந்தேக நபர்களும், அவர்கள் பயன்படுத்திய படகுகளும் தமது பாதுகாப்பில் இருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இலங்கையில் இருந்து கடல் வழியாக இத்தாலி செல்ல முயன்ற 700ற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-18,8)

# வாழ்வியல் வரலாற்றை புதுப்பிக்க வேண்டும்

## புலிகளின் பெண் பிரமுகர் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களுடைய வரலாற்றுப் பாரம்பரியங்களையும், கலை விழுமியங்களையும் நாம் இன்றைய சமாதானச் சூழ்நிலையில் கட்டியெழுப்பவேண்டியவர்களாகவுள்ளோம். எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்று உண்மைகள் மறைகக்கப்படக் கூடாது என்பதற்காக எங் களது சந்ததிகளுக்கு வழி காட்டிகளாகத் திகழ வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பெறுப்பாளர் ஞா. அலை தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச இலக்கிய விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அலை இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,தமிழ் மக்களுடைய வாழ்வியல் வரலாறு யுத்தங்களினால் சிதைவடைந்துள்ளது.

இந்த வாழ்வியல் வரலாற்றைப் புதுபபிக்க வேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமை என்றார். (உ-8)

# நாணயமாற்றுக் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவரப்படும்

## நிதி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

50 வருடங்கள் பழமையான வெளிநாட்டு நாணயமாற்றுக் கொள்கைகளில் அரசாங்கம் குறிப்பிட்ட சில மாற்றங்களைச் செய்யத் தீர்மானித்துள்ளது என நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,இவ் நாணயமாற்றுத் திருத்தங்கள் தொடர்பாக வெளிநாட்டு நாணயமாற்று முகாமைத்துவச் சட்ட மூலம் ஒன்றும் தயாரிக்கப்படவுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு சர்வதேச நிதி மற்றும் வர்த்தகத் தரங்களுக்கு அமைவாக இம் மாற்றம் செய்யப்படவுள்ளது.

தற்போதைய நாணயமாற்றுச் சட்டவிதிகள் முதலீட்டுக்கும் வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகளுக்கும் உசிதமானதாக இல்லையெனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# சோறு போடுகின்ற தமிழுக்கு ஊறு சேர்க்கின்ற எழுத்தாளர்களை எவரும் மதிக்கக்கூடாது

## 'நறுக்குகள்' வெளியீட்டில் கவிஞர் காசி ஆனந்தன் உணர்வெழுச்சி

(சென்னை)

எமது தாய்மொழியான தமிழை மறந்து தமிழிலக்கியம் பேசுகின்ற எவனாயிருப்பினும் அவனை மதிக்கக்கூடாது. சோறு போடுகின்ற தமிழுக்கு ஊறு சேர்க்கின்ற எழுத்தாளர்கள் பலர் நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

எம்மை இலக்கியனாக்கிய தாய்மொழியை மறந்து அதில் எந்தஅளவிற்கு ஆங்கிலம் சேர்க்க முடியுமோ அந்தளவிற்கு தமிழ் மொழியோடு ஆங்கிலத்தைக் கலந்து தமிழ் மொழியை இயன்றளவு கொச்சைப்படுத்தி தமிழ் மொழியை அழித்துக்கொண்டிருப்பவர்கள் ஒருபோதும் தமிழ் இலக்கியர்களாக இருக்க முடியாது. இதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் தமிழகத்தில் இடம்பெற்ற "நறுக்குகள்" நூல் வெளியீட்டு விழாவில் அதன் ஆசிரியரான கவிஞர் காசி ஆனந்தன் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கை அரசு என்னுடைய பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, இலங்கை உளவுத் துறையின் தலைமையகத்தில் வைத்து அவற்றை ஆராய்ந்து ஆய்வு செய்தது.

இலங்கை அரசைக் கவிழ்த்து ஈழத்தில் தமிழர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக எனது பாடல்கள் அமைந்துள்ளதெனக் கூறி என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியது. என்னுடைய பாடல்கள் எனது எதிரியைக்கூட அசைத்துள்ளன. என்னுடைய பாடல்களை இலங்கைக் காடுகளில் துப்பாக்கிகள் ஏந்திய வீரர்கள் இசைத்த வண்ணம் களத்தில் போராடுவதை எனது கண்ணால் கண்டும் காதால் கேட்டும் உணர்ந்துள்ளேன்.

எனது பாடல்கள் எதைச் செய்ய வேண்டும் என நான் நினைத்தேனோ, எனது இலக்கியங்கள் என்ன பயனைத் தரவேண்டும் என நான் நினைத்தேனோ அது நடந்தது. என்னால் அதைக் கொடுக்க முடிந்ததை நினைத்து நான் திருப்திப் பட்டுக்கொள்கிறேன்.

அதேவேளை, ஒரு மனிதன் முதிர்ச்சியடைவதற்கு 15 ஆண்டுகள் தேவை. எனக்கு தற்போது 65 அகவை நடக்கிறது. எனது அகவையின் மிகுதி 50 ஆண்டுகளில் 25 ஆண்டுகளை எனது தாயகமான தமிழீழத்திலும் மிகுதி 25 ஆண்டுகளை இந்தியாவின் தாயகமான தமிழகத்திலும் கழித்துள்ளேன்.

உலகிலுள்ள தமிழர்களுக்கு இரண்டு தாயகங்கள் உண்டு. ஒன்று தமிழீழம் மற்றையது தமிழகம். இவ்விரு தாயகங்களிலும் நான் பாதிப்பாதிக் காலத்தை கழித்துள்ளேன். தமிழ் நாட்டில் இன்னும் எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். எழுதுகின்றனர் இலக்கியம் படைக்கிறார்கள் ஆனால் அவன் படைப்பதற்கு ஆக்கும் இலக்கியத்திலுள்ள தமிழின் அழிவு பற்றி அவன் எண்ணிப் பார்ப்பதில்லை எனச் சுட்டிக்காட்டினார். (உ-18)

### தேயிலைத்தோட்ட ஊழியர் பற்றாக்குறை

(கொழும்பு)

தேயிலை உற்பத்தித்துறையில் எதிர்காலத்தில் பாரிய ஊழியர் பற்றாக்குறை நிலவும் என தேயிலைப் பரிசோதனை நிலையப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் கல்வித்துறையில் முன்னேற்றங்களைக் கண்டுவருவதால், அவர்கள் மாற்றுத் தொழில்களை நாடிச் செல்கின்றனர்.

இதனால் இந்நிலைமையை நிவிர்த்தி செய்ய தேயிலைப் பரிசோதனை நிலையம் பல மாற்றுத் திட்டங்களை தயாரித்து வருகின்றது எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## ஜே.வி.பி.-ஸ்ரீ.சு.க. கூட்டு குறித்து நாளை முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கொழும்பில் இடம்பெறவுள்ள இந்த உயர் மட்ட கலந்துரையாடலில், கூட்டணி அமைப்பது உறுதியான பின்னர் அமுல்படுத்தப்பட வேண்டிய பொதுவான சட்டங்கள், கொள்கைகள், தேர்தல் முன்னெடுப்புக்கள், உயர் பதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, நாளைய தினம் கூட்டணி குறித்த இறுதி முடிவு எட்டப்பட்டால், அடுத்த வருடத் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் ஜனாதிபதி ஆலோசனை செய்து வருவதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## அரசும்- புலிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு சமாதானத்தின் ஸ்திரத்தைப் பேணவேண்டும்

### யுனிசெவ் இலங்கைப் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதானம் நிலைபெறவேண்டும் என்ற விடயத்தில் அரசும் புலிகளும் கூடிய அக்கறை கொண்டாலேயே வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் பாதையில் நகர முடியும் என யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கொட்சைவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த இவர், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட தாய், சேய் நலத் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் இலங்கைப் பிரதி வெளிவிவகார அமைச்சர் லால் தர்மப்பிரிய கமகே மற்றும் ஜப்பானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜெற்சுவோ ஜனூ மற்றும் ஜப்பானிய இலங்கைக்கான தூதுவர் ஜெய்சிரோ ஒட்சுகா உட்பட பல ஜப்பானிய மற்றும் யாழ்ப்பாண வைத்திய அதிகாரிகள், மதகுருமார், பொது அமைப்புப் பிரதிநிதிகள், மனித நேய அமைப்புப்பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலநூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

தொடர்ந்தும் சமாதானம் நிலைபெற்று இன்று உள்ளது போல், என்றும் அமைதி நிலவ அரசும் புலிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடனும் நாட்டு மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அக்கறையுடனும் செயற்படுதல் அவசியம்.

ஏனெனில் கடந்த காலப் போரினால் வடக்கு-கிழக்கில் இருந்த சுகாதாரம், மருத்துவம் சமூக மேம்பாடு, பொருளாதாரம் உட்பட பல வசதிகள் பாதிப்படைந்த நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நான்கில் ஒரு பகுதி குழந்தைகள் போசாக்கின்றி நிறைகுறைந்து பிறக்கின்றனர். அரைப் பங்கு குழந்தைகள் நிறைகுறைந்து போசாக்கு இல்லாதவர்களாக வாழ்கின்றனர். இதைவிட தாய்மார்கள் பலர் போசாக்குக் குறைந்தவர்களாக இருப்பதுடன், வைத்தியசாலைகள் அம்புலன்ஸ் வண்டிகள், ஆய்வுகூட வசதிகள், இரத்த வங்கிகள் அற்று இயங்குகின்றன.

பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்று வாழ்கின்றனர். தவிரவும், பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றை நிவிர்த்தி செய்து நாட்டின் எதிர்காலத்தை வளம் மிக்கதாக உருவாக்க சமாதான முயற்சிகள் ஊடாக நல்ல சந்தர்ப்பமும் வாய்ப்பும் உண்டாகும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கையும் உண்டு என்றார். (உ-4)

## சுகாதார சேவை மேம்பாட்டுக்கு ஜப்பான் அரசு 250 மி. நிதியுதவி

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள தாய், சேய் நலன் சுகாதார சேவைகளை மேம்படுத்த ஜப்பானிய அரசு ரூ.250 மில்லியனை வழங்கவுள்ளது.

வடக்கு-கிழக்கு மற்றும் அதனை அண்டிய மாவட்டங்களான அனுராதபுரம், புத்தளம், மொனராகல ஆகிய மாவட்டங்களில் தாய், சேய் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காகவே இந்த அவசர உதவி. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினூடாக வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜப்பானிய நிதியுதவி, இப்பிரதேசங்களில் தாய், சேய் உயிரிழப்புக்களைக் குறைக்கவும், சிறுவர் மற்றும் பெண்கள் மத்தியில் நிலவும் போஷாக்கின்மையைக் குறைக்கவும் வழிவகுக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ், 10 பிரதான வைத்திய சாலைகளில் மகப்பேற்று மற்றும் குழந்தைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், 28 ஆரம்ப சுகாதார நலன் பிரிவுகளில் தாய், சேய் நலசேவைகள் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-8)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் புலோப்பளை உபஅலுவலக பொது நூலகத்தில் இடம்பெற்ற நூலகக் கண்காட்சியை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாடா வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:இ.செல்வநாதன்)

## அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த வழியில்லை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ள போதிலும், விவசாயிகள் நெல்லை விற்க முடியாத நிலையிலுள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த நிலையங்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லை கொள்வனவு செய்ய முன்வராமையினால் அம்பாறை மாவட்ட விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இதன் காரணமாக விவசாயத்திற்காக வங்கிகளில் இருந்து பெற்ற கடனைக்கூட மீளச் செலுத்த முடியாமல் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-8)

### அஞ்சலக சிற்றூழியர்களைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)


அஞ்சல், உப-அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக் கான பதிலாட்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல தபால் ஊழியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத் தினம் இம்மாதம் 25ஆம் திகதியாகும். இது தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட தபாலகங்களிலும் உப தபாலகங்களிலும் பார்வையிடலாம் என யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (உ-18)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் பொது நூலக வளவில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: இ.செல்வநாதன்)



தோற்றம் 15-03-1933

மறைவு 17-07-2002

**அமரர் சி.இரத்தினசிங்கம்**

(முன்னாள் மின்சாரசபை ஊழியர்)

திதி:- 05-08-2003

ஆண்டு ஒன்றென்ன நூறானாலும்
நீங்கள் நடந்த பாதைகள் இன்றும்
பசுமையாகத் தெரியுதையா
ஒளிந்து உயர் வளித்த எம்தந்தையே
எங்கள் உயிருள்ளவரை
உங்கள் வழியே நாம் சென்று
உம்புகழ் பாடுவோம்.

என்றென்றும் உங்கள் நினைவில்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

# குடாநாட்டில் சிறுவர் மேம்பாட்டு திட்டங்களை அமுலாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

5வயதுக்குட்பட்ட சிறார்கள் உள்ள குடும்பங்களின் விபரங்கள் யாழ்.குடாநாட்டில் திரட்டப்பட்டு வருகின்றன.

மேற்படி விபரங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் திரட்டும்படி சமூக நலன்புரி அமைச்சு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளதையடுத்தே மேற்படி விபரத் திரட்டு இடம்பெறுகிறது.

குடாநாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களும் தற்போது இப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, குடாநாட்டில இயங்கும் சகல சிறுவர் இல்லங்களின் விபரங்களையும் உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி யாழ்.மேல் நீதிமன்றம் பிரதேச செயலர்களைப் பணித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தவிரவும், சிறுவர் தொடர்பான பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுக்கும் வகையிலேயே 5வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விபரங்கள் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தென்மராட்சியின் விளைநிலங்கள் விவசாயிகளிடம் மீளளிக்கும் சாத்தியம்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்தில் அடங்கியுள்ள கைதடி, மறவன்புலோ, தனங்கிளப்பு உள்ளிட்ட தென்மராட்சியின் விளைநிலங்கள் முழுவதையும் உரியவர்களிடம் மீளவும் ஒப்படைக்கும் சாத்தியப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த வகையிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு கைதடி கமநல கேந்திர நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

கைதடி பெரும்பாக அதிகாரி எஸ்.தவராசா தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில சம்பந்தப்பட்ட விவசாயிகள் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்ஸ்ரீநிவாசன், கமநல ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் மற்றும் படை உயர் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் என தென்மராட்சி தெற்கு விவசாய சம்மேளனத் தலைவர் மா.லீலா விநோதன் தெரிவித்தார்.

இதேவேளை, தென்மராட்சிப் பகுதியில் படையினர் வசமிருந்த ஆயிரம் ஏக்கர் நிலம் அண்மையில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதும் சுமார் 4ஆயிரம் ஏக்கர் செய்கை நிலம் தற்போது படையினர் வசமிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-16)

## அ.அட்டை கண்டெடுப்பு

2ஆம் வட்டாரம்,புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி குணசீலன் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ள முடியும். (உ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகளின் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளும் முகவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இல 50, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையக் காரியாலயத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் நடாத்தப்படவுள்ளது. (உ-8)

# சிங்களம் தெரிந்த தமிழர்க்கு தொழில்வாய்ப்பில் முன்னுரிமை

(கொழும்பு)

அரச சேவைகளுக்கு ஆள்சேர்க்கும் போது தமிழ் மொழி தெரிந்த சிங்களவரையும், சிங்களமொழியில் தேர்ச்சியுள்ள தமிழர்களையும் முன்னுரிமை அடிப்படையில் எதிர்காலத்தில் உள்ளீர்க்கப்படவுள்ளதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

அண்மையில் ராஜகிரியவிலுள்ள அரச கரும மொழித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அரச கருமமொழிக் கொள்கை அமுலாக்கல் தொடர்பான கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசாங்க சேவைகளிலுள்ள பதவிகளில் நிரந்தரமாக்கப்படும் போது அனைவருக்கும் இத்தகைமைகள் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படும்.

மொழியானது எல்லா இனங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய ஓர் சிறந்த ஊடகமாகும். இதனடிப்படையில் வீதிப் பெயர்ப் பலகைகள், அலுவலகப் பெயர்ப்பலகைகள் ஆகியவற்றை மும்மொழிகளிலும் நிறுவ வேண்டும்.

அத்துடன், பொது மக்களால் அதிகமாகப் பாவிக்கப்படுகின்ற படிவங்கள் அனைத்தும் மும்மொழிகளிலும் ளெியிடப்பட வேண்டியதும் மிக அவசியமானது என குறிப்பிட்டுள்ளார்.

நாடெங்கிலுமுள்ள நகரசபைகள், உளளூராட்சி சபைகள் போன்றவற்றின் பிரதிநிதிகள் பலர் பங்கேற்கும் இக் கருத்தரங்கில், மும்மொழிகளின் நடைமுறையை எளிய முறையில் நடைமுறைப்படுத்தக் கூடிய வழிவகைகளையும், மொழி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுலாக்கக் கூடிய தனது கருத்துக்கள் பலவற்றை குணசேகர அங்கு முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## இலவச கணனிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''பிற் '' பயிற்சி நெறிகளுக்கான இலவசக் கணனிக் கருத்தரங்கு இன்று மு.ப. 10 மணிக்கு இல .43,அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி என்னும் முகவரியில் அமைந்துள்ள சொப்ற் வியு கணனி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு இந்திய விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மீள் குடியமர்வு கொடுப்பனவு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 266பேருக்கு இரண்டாம் கட்டமாக 10ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். செயலகத்தினால் பயனாளிகளின் பட்டியலை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி 266பேருக்கும் முதல் கட்ட மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 15ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-35)

# சவுதி - இலங்கை நட்புறவை வலுப்படுத்தும் பேரீச்சம்பழம்

(கொழும்பு)

சவுதி அரேபியா இலங்கைக்கு 400மெட்ரிக்தொன் பேரீச்சம்பழத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ் அன்பளிப்பு வைபவம் கடந்த வியாழனன்று மாளிகாவத்தை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் களஞ்சியசாலையில் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது.

சவுதி அரேபியத் தூதுவர் முஹமட் மஹ்முத்அல் - அலி பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில்,

இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இம்முறை அதிகளவிலான பேரீச்சம்பழம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும். இலங்கையிலுள்ள அனைத்து [illegible] பயன்படுத்தும் வகையில் [illegible] வழமையைவிட அதிக[illegible] அனுப்பி வைக்கப்பட்டுள்ள[illegible] ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவ்வாறான செயற்பாடு இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகள் மேலும் வலுப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

வழமையாக ஒவ்வொரு வருடமும் 200மெ.தொன் பேரீச்சம்பழத்தை அன்பளிப்புச் செய்து வந்ததும், விசேடமாக இவ்வருடம் 400மெ. தொன் பேரீச்சம்பழம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-18)

# கைதடிச் சந்தியின் மையத்தில் புதிய காவலரண் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்தியின் நடுவே படையினர் புதிய காவலரண் ஒன்றை அமைத்துள்ளனர். மண் மூடைகள் மரக் குற்றிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக்காவலரணில் இரவு பகல் காவல் கடமையிலும் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, செம்மணி தொடக்கம் நாவற்குழி வரையான வீதியின் இரு மருங்கிலும் படையினர் இருவர் இருவராக இணைந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் ஆங்காங்கே ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (உ-4)

# நல்லூரான் திருவடிக்கு

## (இன்று மூன்றாம் திருவிழா)



### சலனமே ஒழியுதப்பா !

சண்முகா உன்னைக் கூப்ப
சலனமே ஒழியு தப்பா!
கண்மலர் குவிய உந்தன்
கருணையே விரியு தப்பா!
திண்ணமாய் உனது எண்ணம்
திசையெலாம் பொழியுதப்பா!
வண்ணமாய் கோலங் காட்டி
வசந்தமே ஈயு தப்பா!

- தென்நல்லை கு.பகீரதன்

### வாழும் வகையினைக் காட்டிடு!

யாழ கத்துறை யாண்டருள் வேலவா!
ஏழை நின்றன் இணையடி யேத்தியே
நாளும் நாளும் நயந்துனைப் போற்றுவேன்
வாழும் வாழும் வகையினைக் காட்டிடு

குறள் வெண்பா

அன்பர்க் கருளி அரும்பிறவி நீக்கிடுவான்
இன்பத்திரு நல்லூர் இறை. (1)

அல்லும் பகலும் அருள் வான் திருமுருகன்
நல்லூரில் நின்று நயந்து (2)

- பண்டிதர், சுகசிவன

### இன்பங்கள் அள்ளித் தாராயோ?

புள்ளி மயிலேறி துள்ளி வருகின்ற
வள்ளி மணவாளா வள்ளலே வடிவேலா
அள்ளி வரமதை அள்ளி அருளியே
கிள்ளி எறியாயோ உள்ள துயரெலாம்!

பள்ளம் நாடும் வெள்ளமென - பக்தி
வெள்ளம் பாய... உள்ளம் மகிழ..
கள்ளம் இல்லா வள்ளி மணவாளா
துள்ளும் இன்பங்கள் அள்ளித் தாராயோ?

- வதிரி.த.அஜந்தகுமார்

### அருள்செய்!

கொத்துக் கொத்தான தமிழில்
சொல்லெடுத்து நான்
முத்துக்குமரா! உன் கழல்களிற்கு
கவியாய் காணிக்கை செய்கிறேன்
தித்திக்கும் தேன் தமிழ் வாழ
தேசம் எங்கும் அமைதி நீள
எத்திக்கும் கொடுமை வீழ அருள் செய் ஆறுமுகா
அருள்செய் அத்தியாதரா!

- தென்மட்டுவில், தமிழிதயம்

### குவலயத்தைக் காப்பவனே !

கதிரில் உருவாகி கங்கையில் தவழ்ந்தவனே
எதிரில் வரும் பகையை எழிலால் அழிப்பவனே
நாடு மடியார்க்கு நல்லையில் அருள்பவனே
கூடும் வினையகற்றி குவலயத்தைக் காப்பவனே

குகதாசசர்மா சிவகுமார், சுன்னாகம்.

# இயற்கை மருத்துவத்தின் மகத்துவத்தை உணர்ந்து செயற்படின் என்றும் சுகமே

வளர்ந்துவரும் இன்றைய விஞ்ஞான உலகில் பெருகிவரும் நோய்களும் எண்ணிலடங்கா. அவ்வாறான நோய்கள் நம்மைத் தாக்காமல் பாதுகாத்து 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கமைய நல்வாழ்வு வாழ வேண்டுமானால் நாம் இயற்கையை அனுசரித்து நடத்தல் வேண்டும். நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் தரமான உணவுவகைகளையும் நாம் சரியான முறையில் அனுசரித்து நடப்போமாயின், நோய்கள்வருமுன் எம்மை அதிலிருந்து பாதுகாக்கலாம் அல்லது நோய் வந்தபின் அவற்றிலிருந்து எம்மை மீட்கலாம்.


இவ்வாறான உணவுப்பழக்க வழக்கங்களை நாம் நோக்குமிடத்து, இயற்கையாகக் கிடைக்கின்ற பழங்கள், காய்கள், மூலிகைகள், இலைவகைகள், பட்டைகள், சாறுகள் போன்ற வற்றிலிருந்து நாம் பல நன்மையான பலாபலன்களை பெற்றுக் கொள்ள முடியும்.

தற்போதைய காலகட்டத்தில் ஏதாவதோர் சிறுநோய் ஏற்படினும் உடனடியாகவே மருத்துவமனைக்குச் சென்று மணிக்கணக்கில் காத்திருந்து வேறு தொற்று நோய்களையும் தமது உடலில் வாங்கிக் கொண்டு வீடுவந்து சேர்கின்ற பலரை நாம்காணலாம்.

அவ்வாறான அசௌவுகரியங்களை நாமாகவே தவிர்த்துக் கொளளக்கூடிய இலகுவானதோர் முறையினால் வீட்டிலிருந்தவாறே இயற்கையின் உதவியோடு பல நோய்களைக் கட்டுப்படுத்தலாம். எனவே அவ்வாறான இயற்கையின் மருத்துவத்தை நாம் நோக்குமிடத்து அதன் மகத்தான அரிய பல நன்மைகளை அறியலாம்.

## தாவரப்பகுதிகளும் மருத்துவமும்

**பழங்கள் அனைத்தும் பொதுவாக விற்றமின் "சி" சத்துள்ளவை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பத்தன்மையைக் கொண்டுள்ளன. அவ்வாறான சில பழங்களின் நோய் நிவர்த்தித் தன்மையைப் பார்ப்போம்.**



**மாம்பழம்:** இது உமிழ்நீரைச் சுரக்கச்செய்வதோடு, பசியை உண்டு பண்ணும். ஜீரணத்தை எளிதாக்கும. சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்களை குணமாக்கும். அத்துடன் இதயத்துக்கு ம் மூளைக்கு ம் பலத்தைக் கொடுப்பதுடன் பெண்களின் மாதவிலக்கை சீர்செய்து ஒழுங்காக்கும் சக்தி வாய்ந்தது.

**வாழைப்பழம்:** இலகுவாக எக்காலமும், எந்த இடத்திலும் மலிவாகக் கிடைக்கக்கூடிய வாழைப்பழமானது; உடலில் ஏற்படும் பித்தம் மந்தம் போன்றவற்றைக் குணமாக்கும். வாய் நாற்றத்தை நீக்கும் அத்துடன் மூளையைப் பலப்படுத்தி நினைவாற்றலை உண்டுபண்ணும் தன்மை வாய்ந்தது.

**மங்குஸ்தன் பழம்:** இது குடற் புண், வயிற்றுவலி, வாய்நாற்றம், உடல்வறட்சி, மூலநோய், கண் எரிவு, இருமல் போன்ற நோய்களை குணப்படுத்துவதோடு, இதன் கோதை நீரில் காய்ச்சி கசாயமாக உட்கொண்டால் வயிற்றுளைவைக் கட்டுப்படுத்தும்.

**பச்சை இலைவகைகளை எடுத்துக் கொண்டால்,பொதுவாக அவை இரும்புச் சத்தைக் கொண்டவை. அவற்றில் சில இலைவகைகளைப் பார்ப்போம்**

**பொன்னாங்காணி:** சுண்ணச் சத்தும் மணிச்சத்தும் இரும்புச் சத்தும் ஒருங்கே கொண்டுள்ள பொன்னாங்காணி கண்,வாய் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணமாக்குவதோடு, இதனுடன் உள்ளியைச் சேர்த்து 45நாட்கள் தொடர்ந்து உண்டுவந்தால் மூலநோய் குணமாகும்.


**அகத்திக்கீரை:** இது வாய்ப்புண், தொண்டைப் புண் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

**முருங்கை:** இதன் இலைச் சாற்றை அருந்தி வந்தால் சிறுநீர் எரிச்சலைப் போக்கித் தாராளமாக வெளியேறுவதற்கு வழிவகுக்கும். பெண்கள் இதனை உணவுவந்தால் மலட்டுத்தன்மை மாறும்.

**பொதுவாக பச்சைக் காய்கறிகள் யாவும் விற்றமின்கள் கொண்டவை. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.**

**கரட்:** இதிலுள்ள விற்றமின் 'ஏ' சத்து பல், எலும்பு வளர்ச்சிக்கு உதவுவதோடு, மலைக்கண், இரப்பை, குடல் சம்பந்தப்பட்ட நோய்களை நீக்கும்.

**வெங்காயம்:** டிப்தீரியா, காச நோய், இரத்த அழுத்தம், இரப்பை நோய், வாந்தி போன்றன வெங்காயம் உண்டுவரகுணமாகும். இன்னும் பல நோய்களை நீக்கும். அபூர்ப சக்தி வெங்காயத்துக்கு உண்டு. எனவே தினமும் உணவில் சேர்ப்பது நல்லது.



### சிலநோய்களுக்கான இயற்கை மருத்துவக் குறிப்புக்கள்

**மருத்துவ விளக்கம்**

- வேம்பங்கொழுந்து அல்லது துளசிச்சாற்றை தினமும் குறிப்பிட்ட ஓரளவு பருகிவர அழற்சி குணமாகும்.
- மாங்காய் விதையை காயவைத்து பருப்பைப் பொடியாக்கி தேன்சேர்த்து இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் அஸ்மா நோயைக் கட்டுப்படுத்தலாம்.
- வேப்பெண்ணையைச் சுடவைத்து மிதமான சூட்டுடன் நீண்டகாலமாக மாறாமல் இருக்கும் புண் மீது தடவிவர புண்கள் விரைவில் மாறிவிடும்.
- திராட்சை ரசம், திராட்சை லேகியம ஆகியவற்றை உண்டுவர மஞ்சட் காமாலை நீங்கும்.
- இஞ்சி, துளசி சாற்றுடன் தேனை சம அளவுகலந்து நாளொன்றுக்கு 3தடவை உண்டுவர மலேரியா நோய் குணமாகும்.
- திருநீற்றுப் பச்சை இலைகளைக் கசக்கி மூக்கினால் நுகரச்செய்து தும்மல் ஏற்படுத்தினால், மூளைக் காய்ச்சல் கிருமிகள் அதனுடன் வெளியேறிவிடும்.
- சப்பாத்திக் கள்ளிச் சாற்றுடன் தேனைக் கலந்து உண்டுவர வயிற்றுக் கடுப்பு, வயிற்றுவலி குணமாகும்.

வெங்காயத்தைச் சுட்டு மஞ்சளும் நெய்யும் கலந்து கட்டிகள் மீது வைத்துக் கட்டினால் கட்டிகள் பழுத்து உடையும்.

- வெள்ளை வெங்காயச்சாற்றை வலிப்பு வந்தவரின் காதில் 2அல்லது 3 சொட்டுக்கள்விட வலிப்பு குணமாகும்.
- விளாம்பழ ஓட்டைத்தூளாக்கி கரைத்து குழவி கொட்டிய இடத்தில் வைத்து பத்துப் போட்டால் குழவிக்கடி உடனடியாகக் குணமாகும்.
- குழந்தைகள் எதையாவது விழுங்கி விட்டால் சக்கரைவள்ளிக் கிழங்கு/முட்டைக்கோஸ் ஆகியவற்றை வேகவைத்து சாப்பிடக் கொடுக்க விழுங்கிய பொருள் மலத்துடன் வெளியேறும்.
- தீப்புண் ஏற்பட்டால் நெருப்புப் பட்ட இடத்தில் தேன் அல்லது வாழைச் சாற்றை உடனடியாகத் தடவ கொப்பளம் சரியாகும்.

இவ்வாறு வீட்டிலிருந்தவாறே நாம் பல நோய்களைக் குணப்படுத்துவோமாயின் ஆங்கில மருத்துவத்தினால் உண்டாகும் பக்க விளைவுகள், பணச்செலவுகளைத் தவிர்க்கலாம். நமது சுற்றுச்சூழலிலுள்ள இயற்கையைப் பயன்படுத்தி சிறந்த பலாபலன்களை அடைவதற்கு இயற்கையின் மருத்துவப் பயன்பாடுபற்றி ஒவ்வொருவரும் பூரணமாக அறிந்துகொண்டு பக்கவிளைவுகள் அற்ற நல்ல பல பயன்களைப் பெற்றுக்கொள்வோம்.

**தொகுப்பு: எஸ்.றஜனி**

---

## 100 மீற்றர் ஓட்டத்தில்
# இங்கிலாந்து வீரருக்கு முதலிடம்

பெல்ஜியத்தில் நடை பெற்று வருகின்ற க்கிரென்ப்றீ மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இங்கிலாந்து வீரரான ஜெசன் ஹானர் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் இந்தத் தூரத்தைக் கடக்க 10.23 விநாடிகளை எடுத்துக்கொண்டார்.

இப் போட்டியில் மொறீஸ்சியஸ் தீவின் ஸ்ரீவன் பெக்னர் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட அதேவேளை,மூன்றாம் இடத்தினை அமெரிக்காவைச் சேர்ந்த மாக்கிரஸ் புறூஸ்னர் பெற்றுக்கொண்டார் .

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டநிகழ்வில் அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்ரி கெயின் முதலாம் இடத்தினை பெற்றுள்ளார் . இவர் இத் தூரத்தினை கடக்க 11.13 விநாடிகள் எடுத்துக்கொண்டார்.

இரண்டாம் இடத்தினை உக்ரைன் நாட்டைச் சேர்ந்த சன்னா பிறின்சஸ்சும் மூன்றாம் இடத்தினை பிரான்சின் மெரியர் கோட்டிஸ்சும் பெற்றுக் கொண்டார். (உ-68)

# முன்னணியில் திகழும் தென்னாபிரிக்க அணி

இங்கிலாந்தின் 'லோட்ஸ்' மைதானத்தில் இடம் பெற்ற தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ற் போட்டியில் தென்னாபிரிக்கஅணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 92ஓட்டங்களால் இங்கிலாந்து அணியை வெற்றிகொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட இவ் டெஸ்ற் போட்டித்தொடரில் 1:0என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் 509ஓட்டங்களைப் பெற்றால், இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கலாம் என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 417ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணிசார்பாக அன்ரூபிளிற்ஒவ் 142ஓட்டங்களையும், மாக்புஸ்சர் 70ஓட்டங்களையும், நசர் உஷைன் 61ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மைக்கையாநிற்னி ஐந்து விக்கெட்டுக்களையும், சோன் பொலக் மற்றும் அன்ரூகோல் ஆகியோர் தலா இரண்டு விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, இங்கிலாந்துஅணி அதன் முதல் இன்னிங்ஸில் சகலவிக்கெற்றுக்களையும் இழந்து 173ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இம் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சாளரான மைக்கையா நிற்னி 5விக்கெற்றுக்களையும் அன்ரூகோல் 3விக்கெற்றையும் கைப்பற்றினர். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணிவீரரான மைக்கையாநிற்னி மொத்தமாக பத்து விக்கெற்றுக்களை கைப்பற்றியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், தென்னாபிரிக்க அணி அதன் முதல் இன்னிங்ஸில் 6வக்கெற்றுக்களை இழந்து 682ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கிறைகம் ஸ்மித் 259ஓட்டங்களையும் கரி கிரிஸ்ரன் 108ஓட்டங்களையும், டிப்பொன்னர் 92ஓட்டங்களையும் மாக்பௌசர் 68ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டியிலும் இரட்டைச் சதத்தினைப் பூர்த்தி செய்த கிறைகம்ஸ்மித் முதலாவது டெஸ்ற் போட்டியிலும் ஒரு இரட்டைச் சதம் அடங்கலாக மொத்தம் மூன்று இன்னிங்ஸில் மட்டும் துடுப்பெடுத்தாடி 613ஓட்டங்களைக் குவித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-68)

# கவாஸ்கரின் புதிய முயற்சி

கிரிக்கெற் போட்டிகளின் போது எதிரணி வீராகளை அரங்கில் வசைபாடும் நிகழ்வுகளை தடுத்து நிறுத்தும் பொருட்டு இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுடச்சபை காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் கிறிக்கெற் விற்பனரான சுனில்கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

அததோடு கனிஸ்ர மட்டங்களில் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் பயிற்றுநர்கள இதில் கூடுதலான பங்குவகிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வர்த்தக நோக்கமாகமாறியுள்ள கிரிக்கெற் போட்டிகள்களில் என்ன விலை கொடுத்தாவது அதில் வெற்றி பெறவேண்டும் என்று வீரர்கள் செயற்பட்டு வருவதால் வீரர்களிடையே விட்டுக்கொடுப்புத் தன்மை அற்றுவருவதாகவும் சுனில் கவாஸ்கள் லண்டன் லோட்ஸில் கடந்தவாரம் நடை பெற்ற விசேட செயலமர்வின் போது தெரிவித்துள்ளார்.

தொலைக்கட்சி நிறுவனங்களினால் வருமானத்தைக்குறிக் கோளாகக் கொண்டு கிரிக்கெற்துறை சந்தைப்படுத்தப்பட்டு வருவதாலும் அதன மூலம் கிரிக்கெற் வீரர்களுக்கு பெருமளவு நிதி கிடைப்பதாலும் போட்டி மனப்பான்மை தலைதூக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது கிரிக்கெற்துறையில் புதிய பல ஒழுக்கக் கோவைகள் அறிமுகப படுத்தப்பட்டுள்ள போதும் வசைபாடும் நடவடிக்கைகள் பெரிதும் அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# ஆட்ட நாயகனாக டேமியன் மாட்டின் தெரிவு

பங்களாதேஷ் மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் கைன்சில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி 9விக்கெற்றுக்களால் வெற்றி பெற்று இப்போட்டித் தொடரில் 2:0என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 45.1ஓவர்முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 147ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20.2ஓவர்முடிவில் ஒருவிக்கெற்றை மட்டும் இழந்து வெற்றிஇலக்கான 148 ஓட்டங்களைப்பெற்று 9விக்கெற்றுக்களால் இலகுவாக வெற்றிபெற்றுக் கொண்டது.

இவ் அணிசார்பாக டேமியன் மாட்டின் ஆட்டமிழக்காமல் 92ஓட்டங்களையும், மைக்கல் பெவன் ஆட்டமிழக்காமல் 40ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக டேமியன் மாட்டின் தெரிவுசெய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது சர்வதேச ஒருநாள்போட்டி நாளை டாவினில் இடம்பெறவுள்ளது. (உ-68)

# ஈராக்கில் சதாம் ஆதரவாளர்மீது கூட்டுப்படை அழுத்தம் அதிகரிக்கிறது

## சந்தேகத்துக்குரிய அனைவர் மீதும் நடவடிக்கை

(பக்தாத்)

**சதாம் ஹுசைன் ஆதரவாளர்கள் மீதும் அவரது பாத் கட்சியின் உறுப்பினர்கள் மீதும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையணியின் நடவடிக்கைகள் இறுக்கப்பட்டு வருகின்றன. சந்தேகத்துக்குரியவர்கள் அனைவரும் கைது செய்யப்படுகிறார்கள் அல்லது சுடடுக் கொல்லப்படுகிறார்கள்.**

ஈராக்கில் அமெரிக்கர் மீதான தாக்குதல்களுக்கு பயங்கரவாதிகளும் தடை செய்யப்பட்ட ஈராக்கின் பாத் கட்சி உறுப்பினர்களுமே காரணம் என்று ஈராக்கிற்கான அமெரிக்கத் தலைமை நிர்வாகி போல் பிறிமர் குற்றம் சாட்டியுள்ளார்.

பக்தாத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதைக் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், தலைமறைவாகியுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனை உயிருடன் பிடிப்பது அல்லது கொல்வதால் மட்டுமே இவ்வாறான தாக்குதல்களைக் குறைக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே சதாம் ஹுசைனைத் தேடி வரும் அமெரிக்கப் படையினர் ஓர் ஈராக் வாசியான விவசாயி ஒருவரைக் கொன்றதுடன், பலரைக் கைது செய்துள்ளனர்.

பக்தாத்திற்கு மேற்கே 50 கி.மீ தொலைவிலுள்ள கூட்டுப்படையினரின் காவல் நிலையத்திலும் சதாம் ஹுசைனின் ஆதரவாளர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரை அமெரிக்கப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் பாத் கட்சியைச் சேர்ந்த 2 அதிகாரிகள் உட்பட 202 ஈராக்கியர்களை அமெரிக்கப் படையினர் கைது செய்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# மத்திய மாநில தேர்தல்களை ஒன்றாக நடத்த முயற்சி

(சென்னை)

இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் மாநிலங்களுக்கான தேர்தல்களை எதிர்வரும் ஆண்டு மத்திய பாராளுமன்ற பொதுத் தேர்தலுடன் சேர்த்து நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவேண்டிய மத்திய பிரதேசம். ராஜஸ்தான், டில்லி, மஸோராம் சட்ட சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைத்து எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுடன் நடத்துவதற்கு ஆளும் அரசு முயன்று வருகின்றது.

இதற்காக சட்ட சபைகளுக்கான அமைச்சு தேர்தல் ஆணையாளருடன் முறைசாரா ஆலோசனைகளைப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# கனடா மேற்கு மாகாணத்தில் காட்டுத் தீ 70 வீடுகள் நாசம்


(ஒட்டாவா)

கனடாவின் மேற்கு மாகாணமாகிய 'பிரிட்டிஷ் கொலம்பியான்' மாகாணத்தில் கடுமையான காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. கடுமையான காற்றினால் தீ பரவும் வேகம அதிகமாக இருப்பதனால் இத் தீ மேலும் பரவாது தடுக்க ஹெலிகொப்ரர்களில் இருந்து தீயணைக்கும் திரவங்கள் விசிறப்பட்டு வருகின்றன.

இத்தீயினால் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். தீ பரவியிருக்கும் இடத்திலிருந்து 150 மைல் தூரத்தில் இருக்கும் 70 வீடுகள் எரியுண்டிருப்பதுடன், மரம் அரியும் தொழிற்சாலையொன்றும் தீக்கிரையாகியுள்ளது.

இதனால் மின்சாரத் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், தொடர்ந்து பாதைகளும் நெடுஞ்சாலைகளும் மூடப்பட்டிருப்பதாக கனடா அரசு அறிவித்துள்ளது.

மழை பெய்தால் மட்டுமே இத் தீ பூரணமாக அணையக் கூடுமெனவும், அதுவரை தீயை அணைப்பதில் 5 நாட்களுக்கு கடும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனக் கூறப்படுகின்றது. (பி-2)




பீக்கிங்கில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் இது. இதன் ஒரு பகுதி சரியான பராமரிப்பின்றி பழுதடைந்துள்ளது. இப்பகுதிகள் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்குத் தடை செய்யப்பட்டுள்ள பகுதியாகும்.

# பதவி விலகுவதை லைபீரிய அதிபர் ரெய்லர் பின்போட்டுள்ளார்

(மன்ரோவியா)

லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர், இம்மாதம் 11ஆம் திகதி



பதவி விலக இணங்கியுள்ளார் என கானா வெளிவிவகார அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளார்.

மேற்காபிரிக்க அமைச்சர்கள் நேற்று முன்தினம் லைபீரிய ஜனாதிபதியுடன் உரையாடியதன் பின்னரே இந்த அறிவிப்பை கானாவின் வெளிவிவகார அமைச்சர் விடுத்திருக்கின்றார்.

தலைநகர் மன்ரோவியாவில் அமைதியைப் பேணுவதற்கு சர்வதேச அமைதிப்படையொன்றை அனுப்புவதற்கு ஐ.நா.சபை ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில் சார்ள்ஸ் ரெய்லர் பதவி விலக முன்வந்துள்ளார்.

லைபீரியாவுக்கு சர்வதேச அமைதி காக்கும் படையினரை அனுப்புவது தொடர்பாக ஐ.நா.பேரவையில் இடம்பெற்ற வாக்களிப்பில் பிரான்ஸ், ஜேர்மனி, மெக்ஸிகோ போன்ற நாடுகள் கலந்துகொள்ளவில்லை.

ஐ.நா.சபையின் புதிய தீர்மானத்தின்படி ஆயிரத்து 500 நைஜீரியப் படைகள் நேற்று (திங்கள்) லைபீரியாவில் தரையிறக்கப்படவிருந்தனர். இதனைத் தொடர்ந்து 2 ஆயிரம் மேற்காபிரிக்கப் படைகள் அங்கு அமைதியைப் பேணுவதற்காக செல்லவுள்ளதுடன், ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி ஐ.நா.சபையின் உறுதி பேணும் படையினர் செல்லவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் லைபீரியாவின் தற்போதைய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர் பதவியிலிருந்து விலகி நைஜீரியாவில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**சிறுவர் நிலை**

இதேவேளை, யுத்தத்தால் நலிந்துள்ள லைபீரியாவிற்கு உதவவென 30 தொன் உதவிப் பொருட்களை பிரிட்டன் அனுப்பவிருக்கின்றது.

யுத்தத்தினால் லைபீரியாவில் 2 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் தலைநகர்



மன்ரோவியாவுக்குள் நுழைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள சிறுவர்கள் நோய்களினால் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் சுரண்டலுக்கும் உள்ளாகும் ஆபத்து பெருகியுள்ளதாக சிறுவரைக் காப்பாற்றுங்கள் இயக்கம் கவலை வெளியிட்டுள்ளது. ஆயுதக்குழுக்களும் சிறுவர்களை சேர்த்துக்கொள்ளும் அபாயம் இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (பி-2)

# புதிய முதல்வர் பதவியேற்றார்

(சென்னை)

அருணாச்சல பிரதேச மாநிலத்தில் ஐக்கிய ஜனநாயக முன்னணித் தலைவர் றெகோ அபாங் புதிய முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் இத்தா நகரில் நடை பெற்ற நிகழ்ச்சியொன்றில் ஆளுனர் வி.பி.பாண்டு அவருக்கு பதவிப பிரமாணம் செய்து வைத்தார.

நேற்றிரவு சட்டப்பேரவையின் காங்கிரஸ் அரசின் நம்பிக்கைத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதையடுத்து புதிய அரசு பதவியேற்றுள்ளது. (பி-2)

# மகன்களின் கொலைக்கு சதாம் பழிவாங்கலாம்

## அமெரிக்க இராணுவ அதிகாரி கூறுகிறார்

(நியூயோர்க்)

தனது மகன்களான உதேயும், குசேயும் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் விதத்தில் சதாம் ஹுசைன் தாக்குதல்களை நடத்தக் கூடும் என அமெரிக்க மூத்த இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இத்தகவலை டைம்ஸ் நாளிதழ வெளியிட்டுள்ளது.

மொசூல் நகருக்கு வெளியே சதாம் பதுங்கு குழிகளில் பதுங்கியிருக்கக்கூடுமென சந்தேகிக்கின்றோம். அமெரிக்கப் படையினர் மீது திடீர் தாக்குதல்கள் நடத்த இவர் முயற்சி மேற்கொள்ளக் கூடும்.

எனினும் சதாமை உயிருடனோ அல்லது பிணமாகவோ மிக விரைவில் பிடித்துவிட உறுதி பூண்டுள்ளோம் என மேற்குறிப்பிட்ட அதிகாரி மேலும் கூறியிருப்பதாக அந்த நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# அணுவாயுதப் பிரச்சினையில் அமெரிக்க அதிகாரிமீது வடகொரியா சீற்றம்

(சியோல்)


அணுவாயுதப் பிரச்சினை தொடர்பாக ஆறு தரப்புப் பேச்சுக்களில் ஈடுபட சம்மதித்தாலும் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஜோன் போல்ரனுடன் எந்தவித தொடர்பும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்று வடகொரியா அறிவித்துள்ளது.

கடந்த வாரம் தென்கொரிய தலைநகருக்கு விஜயம் செய்திருந்த வேளை, போல்ரன் வடகொரியாவை 'ஒரு நரகப் பயங்கரம்' என்று வர்ணித்திருந்தார்.

வடகொரியத் தலைவர் கிம் ஜொங்-இல் ஒரு கொடிய சர்வாதிகாரி. அரச மோகத்தில் வாழ்கிறார் என்றும் போல்ரன் சாடியிருந்தார்.

தங்கள் தலைவர் அவமானப் படுத்தப்படுவதை சகித்துக் கொள்ள முடியாது என்று இப்பொழுது வடகொரியா அறிவித்துள்ளது.

போல்ரனை இனிமேலும் அமெ



ரிக்க நிர்வாகத்தின் ஒரு அலுவலராகக் கருதப்போவதில்லை என்று வடகொரியா அறிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்கா உட்பட அண்டை நாடுகள் சகிதம் 6 தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளது.

போல்ரன் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் ஆயுதக் கட்டுப்பாடுகளுக்குப் பொறுப்பான அதிகாரி வடகொரியாவை தாட்சண்யமின்றி விமர்சிப்பவர். (பி)

# கண்களில் நீர் வரச்செய்யாத வெங்காயம்

(லண்டன்)

உலகில் முதற்தடவையாக கண்களில் நீரை வரவழைக்காத வெங்காயம் பிரித்தானியாவில் விற்பனைக்கு வந்துள்ளது.

டெஸ்கோ பல்பொருள் அங்காடிகளிலேயே இந்த வெங்காயம் விற்பனைக்கு வந்துள்ளது.

கண்களில் நீரை வரவழைக்கும் பைருவிஜ் என்ற அமிலத்தைக் குறைக்கும் வகையில் வளர்க்கப்பட்ட வெங்காயத்தை அப்பிள் பழம் போன்று கடித்து உண்ண முடியும் என்று கூறப்படுகின்றது.

இப்புதிய வெங்காயம் பல் கலைக்கழக விஞ்ஞானிகளின் துணையுடன் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. (பி-2)

# ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சு நினைவிடத்துக்குத் தீ வைத்தனர் விஷமிகள்

(டோக்கியோ)

ஜப்பானில் ஹிரோஷிமா நகரில், அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட அழிவை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்துக்கு விஷமிகள் தீ வைத்தனர். அங்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அன்புடன் வழங்கியிருந்த ஆயிரக்கணக்கான ''காகிதக் கொக்குகள்'' அத் தீயில் எரிந்து நாசமாயின.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் அத் தீயை அணைத்தனர். எனினும் பாதியைத் தான் காப்பாற்ற முடிந்தது. வண்ணக்காகிதங்களைக் கையினால் மடித்துச் செய்யப்படுபவை அக்காகிதக் கொக்குகள்! ஒருவர் நீண்ட நாள் வாழ வாழ்த்திக் கொடுக்கப்படுபவை. எனவே, ஜப்பானில் அவை நீண்ட ஆயுளின் சின்னமாகக் கருதப்படுகின்றன. ஆயிரம் காகிதக் கொக்குகளை ஒருவர் செய்து சமர்ப்பணம் செய்தால், அவர் நினைத்த காரியம் ஒன்று நிறைவேறும் என்ற நம்பிக்கையும் ஜப்பானில் உண்டு.

இரண்டாம் உலகப் போரின் போது, 1945, ஆகஸ்ட் 6ம் திகதி ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது. அதில் பல்லாயிரக்கணக்கானோர் இறந்தனர். அதன் 58வது ஆண்டு நினைவு நாளுக்கு சில நாள்களுக்குமுன் மேற்கூறிய விஷமச் செயல் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அணுகுண்டு வீசப்பட்டபோது ஏற்பட்ட கதிர்வச்சால் பாதிக்கப்பட்டார் சடாகோ சசாகி என்ற பெண். அவருக்கு 1955ல் ரத்தப் புற்றுநோய் ஏற்பட்டது. அவர் தனது ஆசை நிறைவேற வேண்டும் என்பதற்காக காகிதக் கொக்குகள் செய்யத் தொடங்கினார்.

ஆனால் ஆயிரம் காகிதக் கொக்குகளைச் செய்து முடிக்கு முன் புற்றுநோயால் இறந்துவிட்டார். இச்செய்தி ஜப்பானிய இளைஞர்களின் மனதை வெகுவாகப் பாதித்தது. நாடு முழுவதும் இருந்து நன்கொடைகளைத் திரட்டி சசாகியின் சிலையை ஹிரோசிமாவில் நிறுவினர். இப்பொழுதும் அங்கு வரும் மக்கள் அவரது நினைவாக காகிதக் கொக்குகளை காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

அவ்வாறு குவிந்திருந்த பல ஆயிரம் காகிதக் கொக்குகள் தான் விஷமிகள் வைத்த தீயில் எரிந்து நாசமாகி விட்டன. அது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (பி)

*சிறு படையான் செல்லிடம் சேரின் உறுபடையான்*
*ஊக்கம் அழிந்து விடும்.*
*-குறள்*

# வலம்புரி

## அதாவுல்லாவின் குறுக்கு யோசனை

தமிழ் - முஸ்லிம் மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாயின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனி அலகுகளாகப் பிரிக்கப்படவேண்டும். இவ்வாறு கருத்துகூறியிருப்பவர் அஷ்ரப் காங்கிரஸின் தவிசாளரும், நெடுஞ்சாலை அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை உடைத்து அதன் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்த அதாவுல்லா, தனது முயற்சி தோல்வியில் முடிந்த விரக்தியில் இப்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்க வேண்டுமெனக் கூறி, நாட்டையும், சமாதானத்தையும் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அதற்கான ஓர் ஆரம்ப நடவடிக்கையாகவே வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தனது கருத்தை நியாயப்படுத்த முயன்ற அவர், இனப்பிரச்சினைக்கான தீர்வு, சிறுபான்மைத் தமிழர்கள், சிறுபான்மையினரான முஸ்லிம்களை நசுக்குவதாக இருக்கக்கூடாது எனவும், தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற தமிழ்த் தலைவர்களின் கருத்து தேவை கருதிய சந்தர்ப்பவாதம் என்றும் கூறியுள்ளார்.

அமைச்சர் அதாவுல்லா முன்வைத்த கருத்துக்கள் தமிழ் - முஸ்லிம் இனவாதத்தைத் தூண்டி அதன் மூலமாகச் சமாதான முயற்சியைக் குழப்பும் நோக்கமுடையது என்பதை நடுநிலையில் நின்று நோக்குவோர் தீர்மானித்துக் கொள்வர்.

20 வருட காலமாக இடம்பெற்றுவரும் யுத்தத்திற்கு சமாதானத்தின் வழியாக தீர்வு காண முற்பட்டிருக்கும் வேளையில், ஒரு பொறுப்பு வாய்ந்த

# அமைதி முயற்சியை முன்னெடுக்க சில முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்

## ஜப்பானிய அமைச்சரிடம் கத்தோலிக்க ஆணையம் அளித்த மகஜர்

(யாழ்ப்பாணம்)

அமைதி நடவடிக்கைகள் தோல்வியுறாமல் முன்னெடுக்கப்படுவதற்கு சில முக்கிய பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும் என்றும் இந்தப்பிரச்சினைகள் பற்றி ஏற்கனவே இராணுவ அரசியல் தலைமைப் பீடங்களிடம் எடுத்துக் கூறியிருந்தபோதிலும், அவர்கள் உதாசீனமாக இருந்துவிட்டதாகவும் யாழ்ப்பாணம் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவிலான நீதிக்கும், அமைதிக்குமான ஆணையம் ஜப்பானிய சிரேஷ்ட துணை வெளியுறவு அமைச்சரிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும்,

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இராணுவ மயமாக்கியதுடன், உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கியிருப்பதுடன், இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் 1.3சரத்துக்குமாறாக உயர் பாதுகாப்பு வலயங்கள் விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்படுகின்றன.

கடந்த 12வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்த எமது மக்கள் துன்பங்களுககுள்ளாகி வருகிறாாகள். இவர்களில் பலர் பத்துத் தடவைகளுக்கு மேலாக இடம்பெயர்ந்துள்ளார்கள். இந்த மக்கள் தம் இடங்களுக்குத் திரும்பிச்செல்லும் வகையில் முன் அரண்களை நகர்த்தும்படி நாம் பலதடவைகளிலும் விடுத்த கோரிக்கைகள் செவிமடுக்கப்படவில்லை.

இடைக்கால நிர்வாகம்ஒன்றை நிறுவவேண்டும் என்பதை ஒரு வருடத்துக்கு முன்னா் அமைச்சா் மிலிந்த மொரகொட, உலகவங்கி பிரமுகர்கள், யாழ்ப்பாணம் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட சந்திப்பில் வற்புறுத்தி இருந்தோம். இவைகள் பற்றி கவனம்செலுத்தப்படாமையே இன்றைய முட்டுக்கட்டை நிலைக்கு காரணம்.

இறுதியாக பிரதம மந்திரிக்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஏற்பட்டுள்ளு கயிறுழுப்புப் போட்டியாகும். கடந்த 50 வருடங்களாக இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்று ஏற்படாமல் போனமைக்கு இது போன்ற நிலைமையே காரணம்.

இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பி)

# பிரதமரும் - ஜனாதிபதியும் இணைந்து செயற்படவேண்டும்!

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா கருத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சகவாழ்வு அரசியலை நடத்துவதன் மூலம் பலவீதமான தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும் என்று அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா மேலும் தெரிவித்திருப்பதாவது,

நிறைவேற்று அதிகாரத்திற்கும், பாராளுமன்ற அதிகாரத்திற்கும் இடையிலான முரண்பாடுகளைப் புரிந்துணர்வுடன் நீக்கிக்கொள்ள இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும். அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றபின் அதனை வர்த்தமாணி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் முரண்பாடுகள் இன்றிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதே சிறந்தவழியாகும் என்றும் அவர் மேலும் கூறினார். (வ)

# பாலகுமாரனின் உரைக்கு கூட்டமைப்பு வரவேற்பு

(கொழும்பு)



கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற வியாசனின் உலைக்களம் நூல் வெளியீட்டு விழாவில், தமிழீழ விடுதலை புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன ஆற்றியஉரையினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வில், 'இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு முன்வைத்திருக்கும் நகலுக்கு திருத்தம் சமர்ப்பிப்பதற்கு முன்பாக இதுவிடயத்தில் சகல அரசியல்கட்சிகளையும் ஒன்றிணைதது ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார்' என பாலகுமாரன் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க விடயம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வுரை குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஆலோசனைகள் பெறப்பட்டாலும், இடைக்கால நிர்வாகசபையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படுவதையே மக்கள் விரும்புகின்றனர்.

இந்தியாவுடன் நட்புறவு அடிப்படையில் இணங்கிச் செயற்பட விரும்புவதாக பாலகுமாரன் வெளியிட்ட கருத்து குறித்து அவர் மேலும குறிப்பிடுகையில்,

இந்தியா எமது அண்டைநாடு. தமிழ்நாடு இலங்கையுடன் மிக நீண்டகாலத் தொடர்பு கொண்டுள்ளது. எனவே தமிழ்மக்களின் நலன்களில் இந்தியா அக்கறை எடுக்க வேண்டியது அவசியம்.

இந்தியா தொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள நல்லெண்ண சமிக்ஞைகளை, இந்தியா நுட்பத்துடன் பயன்படுத்திககொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இலங்கையில் வறுமைநிலை மிக மோசமடைந்துள்ளது

## உலக வங்கி தகவல்

(கொழும்பு)

இலங்கை வறுமைக்கெதிரான போராட்டத்தில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

(முன் எப்போதும் இல்லாதவாறு ...லும், பொருளாதாரத்துறையில் பாரியஅளவு பலவீனம் இருப்பதாக உலகவங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

நிகழ்ச்சித்திட்டங்களில் ஏட்பட்டுள்ள பின்னடைவு, தரக்குறைவு என்பனவே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் எனவும்,

# வெலிக்கடைச் சிறைச்சாலையில்

தேவை கருதிய சந்தர்ப்பவாதம் என்றும் கூறியுள்ளார்.

அமைச்சர் அதாவுல்லா முன்வைத்த கருத்துக்கள் தமிழ் - முஸ்லிம் இனவாதத்தைத் தூண்டி அதன் மூலமாகச் சமாதான முயற்சியைக் குழப்பும் நோக்கமுடையது என்பதை நடுநிலையில் நின்று நோக்குவோர் தீர்மானித்துக் கொள்வர்.

20 வருட காலமாக இடம் பெற்றுவரும் யுத்தத்திற்கு சமாதானத்தின் வழியாக தீர்வு காண முற்பட்டிருக்கும் வேளையில், ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் அச் சமாதான முயற்சியைக் குழப்பும் வகையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் எனக்கூறியிருப்பது, இந்நாட்டில் மீண்டும் போர் முரசு கேட்பதற்கு வழி வகுக்குமே தவிர அது சமாதானத்திற்கு வழிசமைக்கப் போவதில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்பதை எவரும் நிராகரித்து விட முடியாது. இங்கு தமிழர் தாயகம் என்பது முஸ்லிம்களையும் உள்ளடக்கியதே. அவ்வகையில், வடக்குகிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சகோதரத்துவ உணர்வுடன் வாழ்வதற்கான வழிவகைகளைத் தேடுவதே தமிழ் முஸ்லிம் தலைவர்களின் கடமையாக இருக்கவேண்டும்.

அதனை விடுத்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இனவாதத்தைத் தூண்டி விடுவது மக்களின் நிம்மதியைக் கெடுத்துவிடும்.

இத்தகையதொரு நிகழ்ச்சியையே அமைச்சர் அதாவுல்லா முன்னெடுத்துள்ளார். அவரின் கருத்துக்களை முஸ்லிம் மக்கள் நம்பி அதற்கு ஆதரவு தெரிவிப்பார்கள் ஆயின், அதனால், சமாதான முயற்சி குழம்புவது உறுதி. அத்தகையதொரு சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால் அது தமிழ், முஸ்லிம் மக்களிடையே நீண்டதொரு யுத்தத்தை ஆரம்பித்துவிடும்.

கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சகவாழ்வு அரசியலை நடத்துவதன் மூலம் பலவீதமான தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும் என்று அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா மேலும் தெரிவித்திருப்பதாவது,

நிறைவேற்று அதிகாரத்திற்கும், துணர்வுடன் நீக்கிக்கொள்ள இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும். அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றபின் அதனை வர்த்தமாணி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் முரண்பாடுகள் இன்றிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதே சிறந்தவழியாகும் என்றும் அவர் மேலும் கூறினார். (வ)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில்

# கையடக்கத் தொலைபேசி மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை கைதிகளிடம் இருந்து, இரு கையடக்கத் தொலைபேசிகளையும் அதற்கான பற்றி மற்றும் மின் சேமிப்பு கலங்களையும் சிறைச்சாலை அதிகாரிகள் நேற்றுக் காலை கைப்பற்றியுள்ளனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னரும் இச்சிறச்சாலையில் இருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றையும், போதைப்பொருள் அடங்கிய சிகரெட் பைக்கட் ஒன்றையும் கொண்டுசென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர் கைதுசெய்யப்பட்டது தொந்ததே.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாதவாறு தடுக்க, சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாக சிறைச சாலை ஆணையாளர் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான பொருட்களை சிறைச்சாலைகளுக்குள் கொண்டு செல்ல சிறைச்சாலை அதிகாரிகள் உதவி வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## தினசரி தியானம்

### சுவர்க்கம்

இறைவனது திருநாமம் ஜெபிக்கப்படும் இடமே சுவர்க்கம். மக்கள் அகிம்சை, சத்தியம், பிரம்மச்சரியம் ஆகியவற்றை மேற்கொண்டு தெய்வீக வாழ்வு வாழும் இடமெல்லாம் சுவர்க்கமே. ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும், தேவையில் உழல்வோர்க்கும், துயரப்படுவோர்க்கும், பயன் கருதாத் தொண்டினை ஆற்றும் மக்கள் ஈடுபட்டிருக்கும் இடமும் சுவர்க்கம்தான். பரம்பொருளை மக்கள் தியானிக்கும் இடமெல்லாம் சுவர்க்கமேயாகும். இதைப் புரிந்துகொண்டு, உங்களை அறிந்துகொண்டு பிறப்பாகிய துன்பத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாயிருங்கள்.

சுவாமி சிவானந்தர்

விடுதலைப்புலிகளுக்கு கூடுதலான ளார். (தி)

# இலங்கையில் வறுமைநிலை மிக மோசமடைந்துள்ளது

## உலக வங்கி தகவல்

(கொழும்பு)

இலங்கை வறுமைக்கெதிரான போராட்டத்தில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

முன் எப்போதும் இல்லாதவாறு வறுமைக் கெதிராகப் போராட்டத்தை ஏற்படுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதை அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளதாக உலகவங்கி கூறியுள்ளது.

தொடர்பாடல், கல்வி மற்றும் மானியத்திட்டங்கள் சுகாதாரத்துறை என்பன உயர்நிலையில் காணப் பட்டாலும், பொருளாதாரத்துறையில் பாரியஅளவு பலவீனம் இருப்பதாக உலகவங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

நிகழ்ச்சித்திட்டங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவு, தரக்குறைவு என்பனவே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் எனவும், இந்நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்வதற்கு அரசியல், மக்கள் மட்ட உதவி தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கையில் 25%மான மக்கள் வறுமையிலே வாழ்கின்றனர் என்றும் உலகவங்கி கூறியுள்ளது. (ந-5)

# சுனில் மெண்டிஸ் படுகொலை

# முக்கிய சூத்திரதாரி கைது

(கொழும்பு)

மேல்மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த வேளை, இவர் கைதுசெய்யப்பட்டதாக கொழும்பு பிராந்திய உதவிப் பொலிஸ் அதியட்சகர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் பயணம் செய்து கொண்டிருந்த வாகனத்தை நிறுத்தும்படி பொலிஸார் உத்தரவிட்ட போதிலும், அதனை மீறிச்செல்ல முயற்சித்தமையால் வானத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இவ்வாகனத்தில் இருந்து கொலைகளுக்கு பயன்படுத்தப்படும் 9 மில்லிமீற்றா துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த ஜூன்மாதம் 16அம் தி... மேல்மாகாணசபை உறுப்பினர் சு... மெண்டிஸ் படுகொலை செ... பட்டாா என்பது குறிப்பிடத்தக்...

# நிலக்கண்ணியை கையாண்ட

# கடற்படை வீரர்கள் படுகாயம்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் ஹொரவப் பொத்தானப் பகுதியில் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடிச் சம்பவத்தில் இரு கடற்படைவீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கடநத வியாழன்று மாலை 6மணியளவில்ஹொரவப் பொத்தானப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட நிலக்கண்ணிவெடியை இவ் இரு கடற்படை வீரர்களும் செயலிழக்கச் செய்ய முட்பட்ட வேளையிலேயே, கண்ணிவெடி தவறுதலாக வெடித்துள்ளது.

இச்சம்பவத்தில் அவ்விருகடற்படை வீரர்களும் பலத்த காயமடைந்துள்ளனர். அவ்விருவரும் திருகோணமலையிலுள்ள கடற்படை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டுள்ளனர்.

(9-18)

# தமிழ்ப் பெயர்க் கையேடு நேற்று வெளியிடப்பட்டது

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ''தமிழ்ப் பெயர்க் கையேடு'' நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி மகாவித்தியால யத்தில் தமிழீழ நிதித்துறைப் பொறுப பாளர் தமிழேந்தி தலைமையில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது.

நூல் வெளியீட்டு விழா ஆரம்பத் தில கிளிநொச்சி மாவட்ட அரச அதி பர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வல யக் கல்விப்பணிப்பாளர் ப.அரிய ரட்ணம், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராசா ஆகி யோர் பொது ஈகச்சுடரினை ஏற்றி வைத்தார்கள்.

தமிழீழத் தேசிய கொடியினை தமிழீழ அரசியல்துற்ற துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைக்க நூலின் வெளியீட்டுரையை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப் பாளர் வே' இளங்குமரன் நிகழ்த்தினார்.

இந்நூலினை கிளிநொச்சி தமிழ் சங்க செயலாளர் எஸ்.பரமநாதபிள்ளை வெளியிட்டு வைக்க கொள்கை முன் னெடுப்பு பொறுப்பாளர் இளங்கோ பெற்றுக்கொண்டார்.

நூலின் மதிப்பீட்டு உரையை கலா நிதி மனோன்மணி சண்முகதாஸும் ஆய்வுரையை பேராசிரியர் அ.சண் முகதாஸ், பண்டிதர் அபரந்தாமன் ஆகி யோரும நிகழ்த்தினார்கள்.

இந்நூல்வெளியீட்டு விழாவில் படைப்பாளிகள், புத்திஜீவிகள், போரா ளிகள் எனப்பலரும் கலந்துகொண் டனர். (வ)

## சுந்தரர் குருபூசை

அகில இலங்கைத் திருமுறைமன் றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானத்திலும் மாலை 4மணி க்கு நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்திலும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை கொண்டா டப்படவுள்ளது. (உ)

## திலீபன் மருத்துவமனை நிறைவு விழா

(நெடுந்தீவு)

லெப்டினன் கேணல் தியாக தீபம் திலீபன மருத்துவமனையின் ஓராண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்றுக் காலை நெடுந்தீவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை நெடுந்தீவுப் பிர தேசப் பொறுப்பாளர் கண்ணனும், தேசியக் கொடியினை தமிழீழ சுகா தார சேவைத் துணைப் பொறுப்பாளர் தமிழ்வாணனும், நினைவுச் சுடர் களை வல்வெட்டித்துறை மருத்துவ மனை வைத்திய அதிகாரி மயிலே றும் பெருமாள், திலீபன் மருத்துவ மனை மருத்துவப் போராளி பூவேந்தன், மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் தனல் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.(த-48)

## இடைக்கால..

வடக்குக் கிழக்கைப் புலிகளிடம் ஒப்படைக்கவே அரசாங்கம் முயன்று வருகிறது.

அரசின் இத்தகைய நடவடிக் கைகளுக்கு எதிராக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றி ணைந்து பலம் வாய்ந்த கட்ட மைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்றும் மேதானந்த தேரர் மேலும் தெரி வித்தார்.

மேற்படி செய்தியாளர் மாநாட் டில் சிஹல உறுமயக் கட்சித் தலை வரும் கலந்து கொண்டார். (த)

## கண்காணிப்பு..

எனவும் மணலாறு படை உயர் அதிகாரி போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவிடம் முறைப்பாடு செய் துள்ளார்.

இம் முறைப்பாடு தொடர்பாக சம்பவ இடத்தை நேரில் பார்வை யிடுவதற்காகவே கண்காணிப்புக் குழுவினர் நாளை அங்கு செல்ல வுள்ளனர். (இ)

## அமைச்சர்..

அமைச்சரின் முன்னிலையில் கைச்சாத் திடப்பட்டது.

நிதி அமைச்சில் இடம் பெற்ற இவ ஒப்பந்தத்தில் ஜப்பானின் சார்பில் இலங்கைக்கான தூதுவர் ஒட்சுகாவும் இலங்கையின் சார்பில் நிதி அமைச் சின் செயலாளர் சரித்த ரத்வத்தை யும் கைச்சாத்திட்டனர். (இ)

# யாழ். மாவட்ட அணியிடம் திருமலை அணி தோற்றது

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட கிரிக்கெற் போட்டி களில் கலந்துகொள்வதற்காக தம்புல் லவுக்குச் சென்ற 19வயதுக்குட் பட்ட யாழ்.மாவட்ட அணி திருகோண மலை அணியை 127 ஓட்டங்களால வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 50 ஓவர்களின் முடிவில சகல விக்கெட்டுகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் எ.யசிந்தன் 77 ஓட்டங்க ளையும் வி.ரஜீவ்குமார் 41 ஓட்டங் களையும் உமாநாத் 32 ஓட்டங் களையும் குணதாஸ் 36 ஓட்டங்களை யும் றொகான் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய திருகோணமலை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கேதீஸ் வரன் 34 ஓட்டங்களை பெற்றார்.

யாழ். மாவட்ட அணி சார்பில் ச.அகிலன் 29 ஓட்டங்களுக்கு 3விக் கெட்டுக்கள்ளயும் ப. லவேந்திரா 20 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக் களையும் வி.ரஜீவ்குமார் ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர். இதே வேளை இன்று நடைபெறவுள்ள ஆட்டத் தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோத வுள்ளது. (நே)


# மரண அறிவித்தல்

## கந்தையா வேலுப்பிள்ளை

(ஓய்வு பெற்ற சாரதி புகையிரதத் திணைக்களம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை நேற்றுக் காலமானார்.

அன்னார் கந்தையா சின்னம்மா (சிங்கப்பூர்) தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமக னும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், மகேந்திரன் (முன்னாள் தலைவர், வலி. மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்) அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

*நொத்தாரிசு கந்தையா வீதி*
*வட்டு. கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.*

திருமதி தங்கரத்தினம்
(மனைவி)

(7392)

# தேவை

கொம்பியூற்றர் தேர்ச்சி பெற்றவர் - ஆண்
தமிழ்த் தட்டெழுத்தாளர் - பெண்

*அனுபவம் உள்ளவர்கள் தேவை. சுயவிபரத்துடன்*
*15.08.2003ற்கு முன் விண்ணப்பிக்கவும்.*

விளம்பர இல:– 389
மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம்.

(7385)

# பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

சொந்தமாக, நல்ல நிலையில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் 09.08.2003 சனிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வலம்புரி அலுவல கத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு: வலம்புரி அலுவலகத்தில் இருந்து 5கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தங்கரத்தினம்
(மனைவி)

நொத்தாரிசு கந்தையா வீதி
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(7392)

அமைச்சரின் முன்னிலையில் கைச்சாத் திடப்பட்டது.

நிதி அமைச்சில் இடம் பெற்ற இவ ஒப்பந்தத்தில் ஜப்பானின் சார்பில் இலங்கைக்கான தூதுவர் ஒட்சுகாவும் இலங்கையின் சார்பில் நிதி அமைச் சின் செயலாளர் சரித்த ரத்வத்தை யும் கைச்சாத்திட்டனர். (இ)

குறிப்பு: வலம்புரி அலுவலகத்தில் இருந்து 5கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்.


# உங்கள் வலம்புரியின் வாரமலர்

## சங்குநாதம்




★சீரழிந்து போகின்ற யாழ்ப்பாணக் கலாசாரம்.
★இடைக்கால சபைக்கு எதிராக ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்.
★சங்குநாதத்தின் ஆலடி மாநாடு மதக்கலவரத்தைத் தூண்டுகிறது.
யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் குற்றச்சாட்டு
★பன்னாட்டுப்படைகள் இலங்கைக்கு வருமா?
★தமிழ்ச்செல்வனின் கிழக்கு விஜயம்,
தென்னிலங்கை அரசியலில் சர்ச்சை
★வியாசரின் பதில்கள்.
★செங்கை ஆழியானின்
ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
★பொன்.கணேசமூர்த்தியின்
கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள்
வைகறையில் உங்கள் உள்ளங்களில்
ஒலிப்பது

விலை ரூபா 14.00

## சங்குநாதம்



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.